பக்கங்கள்: 13

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 31 வெள்ளிக்கிழமை 16.09.2022 கதிர் 313

### இனி இது ரகசியம் அல்ல!

ஜெனிவாவில் இலங்கை விடயங்களைக் கையாளும் முக்கிய ராஜதந்திரி ஒருவருக்கு நெருக்கமானவருடன் உரையாடினேன்.

இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் நகல் வடிவம் பிரயோசனமற்றது,

2

# சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக வாய்க்கு வந்தவற்றை உளறாதீர்!

## ரணில் அரசைப் போட்டுத் தாக்கும் சுரேஷ்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் சர்வதேச சமூகத்தைத் தவறான பாதையில் வழிநடத்துகின்றனர் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் அமெரிக்காவின் யுஎஸ்எய்ட் அமைப்பின் நிர்வாக இயக்குநர் சமந்தா பவர் கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். அதேபோல் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். அவர்களது கூற்றுகளுக்குப் பதில் அளிக்கும் விதத்திலேயே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

12

## நினைவேந்தல் நிகழ்ச்சிகளை இழிவுபடுத்தமால் நடத்துங்கள்!

### யாழ். பல்கலை மாணவர் அறிவுறுத்து

போராளிகளின் நினைவேந்தல் நிகழ்வுகளை இழிவுபடுத்தமால் முன்னெடுக்க வேண்டும் என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2

## ரயில் நிலைய மேடை வரை காரை இழுத்து வந்த ரயில்!



யாகொட விபத்தில் ஒருவர் பலி

ரயிலுடன் கார் மோதிய விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, யாகொட ரயில் நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

2

## பேருவளை கடலில் மூழ்கி இரு இளைஞர்கள் மரணம்

பேருவளை - மாகல்கந்த கடலில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் நேற்றுப் பிற்பகல் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, இவர்களுடன் நீரில் மூழ்கியபோது மீட்கப்பட்ட இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பேருவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பேருவளை - மாகல்கந்த பிரதேசத்தில் வசிக்கும் 19 மற்றும் 20 வயதுடைய

2

## சகல பாடசாலைகளுக்கும் திங்கட்கிழமை விடுமுறை

இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவையொட்டி எதிர்வரும் 19ஆம் திகதி இலங்கையில் தேசிய துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரச நிறுவனங்களுக்கு விசேட விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதைத்

2

## ஒற்றையாட்சிக்கு எதிராகவும் தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து வீரச்சாவடைந்தாராம்

### மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கண்டுபிடிப்பு



'ஒற்றையாட்சிக்கும் 13ஆம் திருத்தத்திற்கும் எதிராக உண்ணாநோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தியாகதீபம் அண்ணன் திலீபன் அவர்களின் வழியில் பயணிக்க அவரின் நினைவுநாளில் சபதமெடுப்போம்' என்று கூறுவது எந்த வகையிலும் அரசியலாகாது.இதை யாராவது அரசியலாகக் காட்ட முற்படுவார்களென்றால் அந்த அரசியலை நாங்கள் தொடர்ந்தும் செய்துகொண்டே இருப்போம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஷ்.

ஒற்றையாட்சியையும், 13ஆம் திருத்தத்தையும், அவற்றை ஏற்கின்ற அரச ஆதரவு ஒட்டுக்

12

## பகிடிவதையை எதிர்த்து நின்ற மாணவர்களின் மீது தாக்குதல்

### பேராதனையில் அடவடித்தனம்



பேராதனை பல்கலைக்கழகத்தின் கல்வி கற்கும் மாணவர் குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் நால்வர் பேராதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

12

## சில மாதங்களில் தீர்வு ஜனாதிபதி நம்பிக்கை



முப்பது வருடகால யுத்தத்தை இலங்கை வெற்றியுடன் முடிவுக்குக் கொண்டு வந்த நிலையில், தேசிய பிரச்சினைக்கான தீர்வுக்காக, தமிழ் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இன்னும் சில மாதங்களில் தீர்வு காணப்படும் எனத் தாம் நம்புகிறார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி தேசிய பாதுகாப்பு கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி

12

## ராஜபக்ஷ குடும்பத்தினரின் பிணைக் கைதியாக ரணில்



### அம்பாறை நிகழ்வில் சஜித் சாடல்

இந்நாட்டு மக்கள் மனதில் பொதுமக்கள் போராட்டமொன்று எழுந்தது. மக்களை ஒடுக்கும் அரசை விரட்டியடித்து விட்டு ஜனநாயக அரசை ஸ்தாபிப்பதாக இருந்தாலும், நாட்டின் பொருளாதாரக் கொலையாளியான பிரிவினர்களின் தயவில் அவர்களைப் பாதுகாக்கக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி நாற்காலியில் அமர வைத்துள்ளனர். அவர் கூட தற்போது ராஜபக்ஷ குடும்பத்தின் பிணைக்கைதியாக

2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் ஒன்றுமே இல்லை என்ற தமிழர் தரப்பின் கருத்துக்களை அவர் மறுத்துரைத்தார்.

இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை நிலைமை தொடர்பாக சமர்ப்பித்த தமது அவதானிப்பு அறிக்கை மிகக் காட்டமான விடயங்களை கொண்டிருக்கின்றது. ஆனால் அதன் அடிப்படையில் எழக்கூடிய இலங்கை தொடர்பான புதிய பிரேரணை அத்தகைய காட்டத்தைக் கொண்டிருக்கவில்லை என்று நான் சுட்டிக் காட்டினேன். அதை அவர் மறுத்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை முழுமையாக வரவேற்பதாக புதிய பிரேரணை நகல் ஆரம்பத்திலேயே குறிப்பிடுகின்றது என்றார் அவர். இலங்கை தொடர்பான முன்னைய 30/01 மற்றும் 46/01 தீர்மானங்களை ஏற்று, அவற்றின் அடிப்படையிலேயே புதிய பிரேரணை நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று மேற்படி பிரமுகர் தெரிவித்தார்.

தமிழர் தொடர்பில், அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமைகள் மீறல்கள் போன்றவை தொடர்பில் இதுவரை காலமும் கூறப்பட்டு வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அவதானிப்பு அறிக்கையில், இம்முறை பொருளாதார குற்றங்கள், பயங்கரவாத தடைச் சட்டம், காலி முகத்திடல் (அறகலய) போராட்டக்காரர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் என்று பல்வேறு புதிய விடயங்களை உள்செருகி, தமிழர்களின் மிக முக்கியமான பிரச்சினைகள் அந்த அவதானிப்பு அறிக்கையில நீர்த்துப் போகச் செயயப்பட்டு விட்டன என்று நான் குறிப்பிட்டேன். அதையும் அவர் மறுத்தார்.

தமிழர்களின் மேற்படி விடயங்கள் - பிரச்சினைகள் - தொடர்பில் நீதி நிலை நாட்டப்பட்டு, பொறுப்புக் கூறல் கடப்பாடு முன்னெடுக்கப்படாத காரணத்தினால் தான் இந்த புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன என்பதையே மனித உரிமைகள் ஆணையாளர் தமது பரிந்துரை அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளார்.

அதாவது தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள், கொடூரங்கள், மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை நிலை நாட்டாமல், தண்டனை விலக்களிப்பு தொடர்ந்தமை காரணமாகவே இத்தகைய புதிய குற்றங்களை இழைக்கும் தைரியமும் துணிச்சலும் போக்கும் கொழும்பு அரசில் கட்டவிழ்ந்து இருக்கின்றது என்பதைத்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அதைப் பலரும் கவனிக்கவில்லை என்றார் அந்தப் பிரமுகர்.

பழைய விவகாரங்களில் நீதி நிலை நாட்டப்பட்டு, பொறுப்பு கூறல் நடைமுறைப்படுத்தப்படாதமையால்தான் இத்தகைய புதிய குற்றங்கள், தவறுகளை, மீறல்களை இழைக்கும் தைரியம் அதிகாரத்தில் இருப்பவருக்கு வருகின்றது என்பதே ஆணையாளரின் செய்தியின் நோக்கம். ஆகவே புதிய விடயங்கள், குற்றங்கள் தவறுகள் குறித்து ஆணையாளரின் அறிக்கையில் விவரங்கள் சேர்க்கப்பட்டமை தமிழர்களுடைய பிரச்சினையை நீர்த்துப் போக வைக்கும் நடவடிக்கை அல்ல என்று அவர் வாதிட்டார்.

இதற்கிடையில் ஜெனிவாவில் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்காக அங்கு சென்றிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனை கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் நேற்று கொழும்பிலிருந்து தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்பதை சம்பந்தன் தரப்பு வட்டாரங்கள் மூலம் அறிய முடிந்தது.

இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குத் தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை, அதை மீறுகிறது என்ற கருத்துகளை ஜெனிவாவில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வலிமையாக எடுத்துரைக்கும் படியும், அதுவே கூட்டமைப்பின் முக்கிய நிலைப்பாடாக ஜெனிவாத் தரப்புகளுக்குக் கோடி காட்டப்பட வேண்டும் என்றும் சம்பந்தன், சுமந்திரனை வழிப்படுத்தினார் என அறிய வந்தது.

சம்பந்தனின் வழிகாட்டலை சுமந்திரன் ஜெனிவாவில் முறையாகப் பின்பற்றினாரா என்பதை ஜெனிவா வட்டாரங்கள் மூலம்தான் அறிய வேண்டும்.

புதிய விடயங்களைக் கட்டவிழ்க்க முன்னர், பழைய வாக்குறுதிகளை இலங்கை அரசை நிறைவேற்ற வையுங்கள் என்பதுதான் தமிழர் தரப்பின் இப்போதைய பிரதான கோஷமாக இருக்க வேண்டும் என்பதே சம்பந்தனின் நிலைப்பாடு.

இது தொடர்பிலும் நமது புத்திஜீவிகள் தங்கள் வாதப் பிரதிவாதங்களை இங்கு இனி ஆரம்பித்து விடுவார்கள் என்று நம்பலாம்.

- மின்னல் -

## ராஜபக்ஷ குடும்ப ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறியுள்ளார்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை தேர்தல் தொகுதியின் பிரதான அலுவலகத் திறப்பு விழாவும் தேர்தல் தொகுதிக் கூட்டமும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் போராட்டத்தைத் தாக்கியதால் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கூட தேர்தல் காலத்தில் தாக்குதல்களையும் வன்முறைகளையுமே மஹிந்த தரப்பினர் மேற்கொண்டனர்.

ஐ.தே.க.காரர்களைத் தாக்கியவர்களுக்கும் ஐ.தே.க. உறுப்பினர்களைக் கொன்றவர்களுக்கும் கூட தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க அமைச்சுப் பதவிகளை வழங்கியுள்ளார்.

கடந்த காலங்களில் அம்பாறை மக்கள் சிறந்த முறையில் விவசாயம் செய்து நல்லதொரு வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். அவர்கள் யாருடைய அடிமைகளோ அல்லது கைதிகளோ அல்லர்.

எனினும், அன்று சிறந்து விளங்கிய நாட்டின் விவசாயிகள், மீனவர்கள், கூலித் தொழிலாளிகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பத்தினர், அங்கவீனமான குடும்பத்தினர், பாடசாலை சிறுவர்கள் என அனைவரும் இன்று உதவியற்ற நிலையில் உள்ளனர்.

தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் திரிபோ கூட கொடுக்க முடியாத இந்த அரசு இந்த நாட்டின் பொருளாதாரத்தை அழித்தது.

தற்போது நெல்லுக்கு நல்ல விலை கிடைப்பதாகவில்லை. உர மானியம் கிடைப்பதில்லை. குழந்தைகளுக்கு பால் மா இல்லை. மண்ணெண்ணெய்யோ அல்லது பிற எரிபொருள்களோ இல்லாத நிலையில், மொட்டு அரசு தமக்கு நெருக்கமாகச் செயற்படும் பிரிவினர்களுக்கிடையே அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கொன்று குவித்த ராஜபக்சர்கள் அமைச்சுப் பதவிகளை ஏற்காவிட்டாலும் அவர்களுடன் நட்புறவு கொண்டாடும் பிரிவினர்களூடாக அமைச்சுப் பதவிகளைப் பெற்று ராஜபக்ஷக்கள் விரும்பியவாறு நாட்டை ஆட்சி செய்து வருகின்றனர்.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.10 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.5 இலட்சமும் என நட்டஈடு வழங்கப்பட்டாலும் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு கோடிக்கணக்கு.

ஈஸ்டர் தாக்குதலில் எங்களுடைய சொந்த மக்களே கொல்லப்பட்டாலும் சுகபோகம் அனுபவிப்பது அமைச்சர்கள்தான்.

இவ்வாறான நிலவரங்களை உருவாக்க மக்கள் வீதியில் இறங்கவில்லை. மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் இதுவல்ல.

புதிய தேர்தல் மூலமே அந்த மாற்றம் ஏற்பட வேண்டும். அதற்காக அனைவரும் தயாராகவுள்ளோம் - என்றார்.

## சகல பாடசாலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, அரச மற்றும் அரச அங்கீகாரம்பெற்ற தனியார் பாடசாலைகள் அனைத்தும் எதிர்வரும் திங்கட்கிழமை (19) மூடப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## பேருவளை கடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டபிள்யூ.பிரபானு கௌசல்யன் மற்றும் சலனா டில்லான் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

18 வயதுடைய இளைஞரே மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மூன்று இளைஞர்களும் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது, திடீரென அலையில் அடித்துச் செல்லப்பட்டதையடுத்து பிரதேசவாசிகள் முதலில் இளைஞர் ஒருவரை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர், கடற்படையினர் இணைந்து மக்கள் நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போது மற்ற இரண்டு இளைஞர்களும் கண்டுபிடிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டனர்.

உயிரிழந்த இரு இளைஞர்களின் சடலங்கள் பேருவளை பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

உயிர் பிழைத்தவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் நிலைய மேடை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் கதவு இல்லாத ரயில் கடவை ஒன்றில் வேகன் ஆர் ரக கார் ஒன்று இவ்வாறு ரயிலுடன் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து இடம்பெற்ற பின்னர் அந்தக் கார் ரயிலில் சிக்குண்டு யாகொட ரயில் நிலையம் வரை இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

விபத்து நடந்த சமயம் காரில் சாரதி மாத்திரம் இருந்துள்ளார். அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

## நினைவேந்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலின் போது ஏற்பட்ட முரண்பாடு தொடர்பாகக் கண்டன அறிக்கை ஒன்றை நேற்று ஒன்றியம் விடுத்துள்ளது. அதில் கூறப்பட்டவை வருமாறு:-

1987ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் அடங்கிய முக்கிய ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகதீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நிறைவும் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்த முதல் நாளும் இன்றாகும்.

உலகின் பல இடங்களில் நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு கொண்டிருக்கும் இன்றைய நாளில், தியாகதீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அந்தப் புனித மண்ணில் இன்று அரங்கேறிய சில விரும்பத்தகாத செயல்கள் மக்களிடையே அறச்சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தியாகத்தின் எல்லையை கேள்விக்குள்ளாக்கிய தியாகி திலீபனின் நினைவேந்தல் நாளில் அரங்கேற்றப்பட்ட விரும்பத்தகாத செயல்கள் சந்தேகங்களையும் எழுப்பிச் சென்றுள்ளன. தியாகி தீபம் திலீபனின் ஐந்து அம்சக் கோரிக்கைகள் எவையுமே 35 வருடங்கள் கடந்தும் நிறைவேறாது அவைச் அந்தரத்தில் தொங்கியே நிற்கின்றன. அவரது கனவுகளை மெய்ப்பிப்பதே தமிழ் மக்களது கடமையாகவும் உள்ளது.

தொடர்ந்து இவ்வாறாக நம் இனத்தையும் தமிழீழ விடுதலை போராட்ட வரலாற்றையும் உலக அரங்கில் கொச்சப்படுத்தும் விதமான கீழ்த்தர விடயங்களை தவிர்த்து, நம் போராட்ட வரலாற்றை அடுத்த சந்ததிக்கு கடத்தும் முக்கிய பொறுப்பில் உள்ள நாம் அதை இழிவுபடுத்த வேண்டாம் எனவும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து நம் தாயகத்தில் இடம்பெற கூடாது எனவும் வலியுறுத்துவதுடன், இவ் விடயத்திற்கு எமது யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது. - என்று கூறப்பட்டுள்ளது.






# மன்னார் தொடர்பாக பேசுவதற்கு டயனா கமகே அருகதையற்றவர்!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. காட்டம்

மன்னார் மாவட்டத்துக்கு என தனித்துவமான கலை கலாசாரம் உண்டு. எனினும் மன்னார் மாவட்டம் தொடர்பாக தரக் குறைவாகப் பேசுவதற்கு இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவிற்கு எவ்வித அருகதையும் இல்லை எனவும், அவரது கருத்துக்கு கண்டனங்களை தெரிவித்துக் கொள்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

புதிதாக இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டம் தொடர்பாக கோபத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தை ஊடகங்கள் ஊடாகத் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தை ஒரு களியாட்ட இடமாகவும், குறிப்பாக தன்னை சிறு வயதில் கருவாடு காய வைப்பதற்கு மன்னாரிற்கு அனுப்ப உள்ளதாக தன்னை பயமுறுத்தி வளர்த்தனர் எனவும், அவர் கூறியுள்ளார்.

அவரது கருத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

மன்னார் மாவட்டம் மிகவும் கலை, கலாசார பண்புகள், கடல் வளம், விவசாய வளம் அனைத்தோடு பொருந்தியதாக அமைந்துள்ளது.

தற்போது கல்வியில் தலை சிறந்து விளங்கிக் காணப்படுகின்றது. தற்போதைய உயர் தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த காலங்களை விட இம்முறை உயர்ந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம், மடு திருத்தலம் ஆகிய இரு பழைமை வாய்ந்த திருத்தலங்கள் உள்ளன.

எனவே மன்னார் மாவட்டத்தின் கலை கலாசார பண்புகள் தெரியாமல், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஊடகங்கள் முன் கதைப்பது கண்டிக்கத்தக்க விடயம் என்பதோடு, இப்படிப்பட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கிய ஜனாதிபதி அதனை பரிசீலிக்க வேண்டும்.

குறித்த பெண் சில காலங்களுக்கு முன் நாடாளுமன்றத்தில் கருத்தை முன்வைத்தார்.

நாட்டில் கஞ்சா வளர்ப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும்.கொழும்பை இரவு நேர களியாட்ட வலயமாக மாற்ற வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பேசி இருந்தார்.

அவருடைய செயல்பாடுகள் தொடர்ச்சியாக இவ்வாறு இருக்கும் போது அவருக்கு இராஜாங்க அமைச்சு



பொறுப்பு வழங்கியமை தொடர்பாக ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

# 20 மாதங்களில் 10 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேற்றம்!

கடந்த 20 மாதங்களில் 10 லட்சத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர் எனக் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும், பிரதிக் கட்டுப்பாட்டாளருமான பியூமி பண்டார தெரிவித்தார்.

கடந்த வருடம் (2021) ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரையிலான 20 மாத காலப் பகுதியில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 992 பேர் புதிதாக கடவுச்சீட்டுகளை பெற்றுள்ளனர் எனவும், அக்காலப்பகுதியில் 10 லட்சத்து 50 ஆயிரத்து 24 பேர் வெளிநாடு சென்றுள்ளனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். 44 லட்சத்து 97 ஆயிரத்து 122 இலங்கையர்கள் கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் கனவுப் பேச்சு

**“செட்டி நட்டம் ஊர் மேலே’ என்பார்கள். அதுபோல தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் சித்து விளையாட்டுக்கள் தமிழர் தலை மீது போல.**

**நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான ஆபத்பாந்தவன் தாமே என்ற தகைமையைக் காட்டித் தான் தமக்கு கிட்டவே முடியாத ஜனாதிபதிப் பதவியை ஒருவாறு சூறையாடிக்கொண்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**ஆனால், இப்போது, பொருளாதார மீட்சிக்கு நீண்ட காலம் பிடிக்கும், உணவுப் பற்றாக்குறையும் நெருக்குவாரங்களும் அடுத்த இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் என்றெல்லாம் இழுபறிப்படும் நீண்ட கால அளவீடுகளைக் கூறுகிறார்.**

**ஆனால் கடந்த ஏழு தசாப்தங்களாக நீடிக்கும் இனப் பிரச்சினைக்கு சில மாதங்களில் தீர்வு என்று மிகுந்த நம்பிக்கையுடன் கயிறு விடுகிறார்.**

**‘வெறும் கை முழம் போடுவது போல’ தமிழர் விவகாரத்தை வைத்து எல்லோர் தலையிலும் மிளகாய் அரைக்க அவர் முயற்சிக்கின்றார் என்பதையே இப்பேச்சுக் காட்டுகின்றது.**

**உள்ள தென்னிலங்கைத் தலைவர்களில் பேரினவாத வெறி குறைந்தவர், சமரசப் போக்குக் கொண்டவர், இணக்கத் தீர்வு முயற்சிகளில் ஈடுபட்டவர் என்பவை எல்லாம் ரணிலுக்கு உள்ள தகைமைகள்தான்.**

**ஆனால், தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதியான, நேர்மையான, தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை நிறைவு செய்கின்ற தீர்வு ஒன்றைத் தரும் எண்ணம் தமக்கு மனப்பூர்வமாக உண்டு என்பதை அவர் சொல்லிலும் செயலிலும் இன்னும் நிரூபித்துக் காட்டியவர் அல்லர்.**

**இந்த விடயத்தில் அவரைப் பொறுத்தவரை ‘கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்’ என்ற நிலைமைதான் இப்போதும்.**

**2002 – 2003 களில் பிரதமராக இருந்து கொண்டு விடுதலைப் புலிகளுடன் ஒரு சமரசத்துக்குப் போனார் ரணில். அப்போது நாடாளுமன்றப் பெரும்பான்மையை வைத்திருந்த ரணிலுக்கு நிறைவேற்றதிகாரத்தைக் கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு கிட்டவில்லை. மாறாக, அவர் இடைஞ்சலாக ரணிலுக்குக் குடைச்சல் தந்து கொண்டிருந்தார்.**

**2015 – 2018 களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ரணில் சமரச முயற்சிகளை ஆரம்பித்த போதும், கடைசிக் கட்டத்தில் நிறைவேற்று அதிகாரத்தை வைத்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எல்லா முயற்சிகளுக்கும் முட்டுக்கட்டை போட்டு, ஆப்படித்து, அவற்றை இடையில் நொண்டப் பண்ணினார்.**

**இப்போதும் சில மாதங்களில் தீர்வு என்கிறார் ஜனாதிபதி ரணில். அதற்காகத் தமிழர் தரப்புடன் பேச்சு என்றும் கூறுகிறார்.**

**அவர் பேசலாம். தீர்வுக்கான இணக்கத்திற்கும் கூட வரலாம். ஆனால் இப்போது ‘நாயை கண்டால் கல்லில்லை’ என்ற நிலைமை.**

**முன்னர் அவரின் முயற்சிகளுக்கு நிறைவேற்றதிகார ஜனாதிபதிகள் முட்டுக்கட்டை போட்டனர். இப்போது அந்த அதிகாரம் அவர் கையில். ஆனால் தாம் எட்டக்கூடிய தீர்வு இணக்கத்துக்கு சட்ட அனுமதி பெறுவதற்கான நாடாளுமன்றம் அவர் கைகளில் இல்லை.**

**ஆகவே இன்னும் சில மாதங்களில் தீர்வு என்ற அவரது கதை – கனவு – அளாப்பல் – வழமை போல புஸ்வாணமாகத்தான் போகும்.**

## 13 ஆவது திருத்தச் சட்டமே இறுதித் தீர்வு என இந்தியா தனது நிலைப்பாட்டை எடுக்கக்கூடாது!

### சிவாஜிலிங்கம் இடித்துரைப்பு



அரசியல் தீர்வு விடயத்தில் 13 ஆவது திருத்தச் சட்டமே இறுதித் தீர்வு என இந்தியா அரசாங்கம் தனது நிலைப்பாட்டை எடுக்கக் கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் 51 ஆவது அமர்வில் இலங்கைதொடர்பில்தீர்க்கமான முடிவினை எடுக்க வேண்டும். இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமை பேரவை நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றாது அலட்சியம் செய்தே வருகின்றது. இலங்கையின் இந்த பித்தலாட்ட செயலை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு இறுக்கமான தீர்மானத்தை எடுக்கவேண்டும். இதேவேளை, ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடரில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகக் குரலை கொடுத்துள்ளார்கள்.

ஆனால் இந்தியா இனப்பிரச்சினைக்கான தீர்வுபற்றிக் கூறிப்பிட்டுள்ளது. குறிப்பாக இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆம் திருத்த சட்டம் ஊடாக என்று கூறப்பட்டுள்ளது அவ்வாறு என்றால் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆம் திருத்தத்தை தீர்வாக கருதுகிறதா என கோர விரும்புகிறோம். நிச்சயமாக இதனை ஈழத் தமிழினம் ஒருபோதும் தீர்வாக ஏற்றுக் கொள்ள மாட்டாது. எத்தகைய வற்புறுத்தல் என்றாலும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

13 ஆவது திருத்த சட்டம் அரசமைப்பில் உள்ளது. அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாது மலினப்படுத்தியுள்ளது. இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். ஐ.நா மனித உரிமை பேரவையில் இந்தியா பொறுப்புக் கூறல் தொடர்பில் எதையும் கூறவில்லை. இந்தியா பொறுப்பு கூறல் விடயத்தில் எங்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும். – என்றார்.

## வீதிகளில் போராடி அழுதுபுலம்புவதை தவிர பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு வழியில்லை!

### ஜெனீவாவில் எக்னலிகொடவின் மனைவி சந்தியா ஆதங்கம்




இலங்கை அரசாங்கம் தண்டனையிலிருந்து விலக்களிப்பதை மனித உரிமைகள் தொடர்பான அதன் உத்தியோகபூர்வ கொள்கையாக பின்பற்றுகின்றது என ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா ஜெனீவா மனித உரிமை பேரவை அமர்வில் தெரிவித்துள்ளார்.

வறுமை மற்றும் தொடர்ச்சியாக பின் தொடரப்படுதல் துன்புறுத்தல்கள் மெதுவான மற்றும் பின்தங்கியசட்ட அமைப்பைக் கொண்ட நாட்டில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களித்தல் என்பது அதிகாரபூர்வமற்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகக் காணப்படுகின்றது என சந்தியா எக்னலிகொட ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் வீதிகளில் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை செய்யக்கூடிய விடயம் என்னவென்றால் அழுதுபுலம்புவது மாத்திரம்தான் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்பட்டவர்களின் குழுவின் 23 ஆவது அமர்வில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. குழு பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கையைஏற்படுத்தக்கூடியஉண்மை மற்றும் நீதியை வழங்கக்கூடிய சட்டபூர்வமான பொறிமுறையை முன்வைக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2010 ஜனவரி 24 ஆம் திகதி தனது கணவர் காணாமல்போனது முதல் தான் அரசாங்கம் மற்றும் அதன் அமைப்புகளால் எதிர்கொண்ட நெருக்கடிகளைத் தெளிவுபடுத்தியுள்ள சந்தியா எக்னலிகொட இவ்வாறான மோசமான சூழ்நிலையில் காணாமல்போன தனது கணவர் தொடர்பான வழக்கு முட்டுக்கட்டை நிலையில் உள்ளதால் நீதி வழங்கப்படுமா என்பதே பிரதான சவால் எனவும் தெரிவித்துள்ளார்.

2017 இல் பிரதமராகப் பதவி வகித்த வேளை தற்போதைய ஜனாதிபதி காணாமல்போன அனைவரும் உயிரிழந்து விட்டனர் அல்லது வெளிநாட்டு சென்று விட்டனர் எனத் தெரிவித்தார். அவர் நீதியை வழங்குவார் என எதிர்பார்க்க முடியாது எனவும் சந்தியா எக்னலிகொட தெரிவித்துள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியான பின்னர் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழு விசாரணையாளர்களையும் சாட்சிகளையும் குற்றம் சாட்டப்பட்ட வர்களாக மாற்றியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். அந்த ஆணைக்குழு உயர்நீதிமன்ற உத்தரவை மீறியது, சாட்சியங்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்றது இறுதியில் இந்த வழக்குடன் தொடர்புடைய இராணுவத்தினரை அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்யுமாறு பரிந்துரைத்தது எனவும் சந்தியா ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனவர்களின் தாய்மார்களும் குடும்பத்தவர்களும் போராட்டத்தில் ஈடுபடும் அதேவேளை தங்கள் அன்புக்குரியவர்கள் தொடர்பான விடைகளை பெறுவதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை ஜெனீவாவில் சுட்டிக்காட்டியுள்ள சந்தியா எக்னலிகொட 1990 முதல் நான்கு தசாப்தங்களாகிவிட்டன,பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்றுவரை எந்த நீதியும் வழங்கப்படவில்லை எனவும் தெரி வித்துள்ளார்.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்புரிமைக்கு உரித்து உண்டு

## சவூதியில் அமைச்சர் ஜெய்சங்கர் கருத்து





சவூதி அரேபியாவுக்கான தனது மூன்று நாள் பயணத்தின் போது, ஐ.நா.பாதுகாப்புக் கவுன்ஸிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற விடயத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கடுமையாக வலியுறுத்தினார்.

"உலகின் பெரிய ஜனநாயகம், ஐந்தாவது பெரிய பொருளாதாரம், அணு சக்தி மற்றும் தொழில்நுட்ப மையமாக இந்தியா இருப்பதால் பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினராக அது இருப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த நியாயப்பாடு உள்ளது.

"சர்வதேச பாதுகாப்பைப் பேணுவதற்கான தன் நோக்கங்களை நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், வளர்ந்து வரும் உலகளாவிய நிலைமைகளுக்கு ஏற்பத் தன்னை மாற்றியமைத்து, விடயங்களுடன் தொடர்புடையதாகவும் கவுன்ஸில் இருக்க வேண்டும் - என்று அவர் சவுதி நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறினார்

சவுதி அரேபியா மேற்கு ஆசியாவின் பிராந்திய பெஹிமோத் ஆகும்.ஆறு நாடுகளின் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலுக்கு (ஜி.சி.சி.) அது தலைமை தாங்குகிறது, அத்துடன் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பில் அதன் வலுவான பளுவைக் கொண்டுள்ளது.

ஜெய்சங்கர், சவூதி அரேபியாவை அதன் ஈர்க்கக்கூடிய வளர்ச்சி எண்கள் காரணமாக மட்டுமல்லாமல், வலு ஆற்றல் சந்தைகளில் அதன் மைய நிலைப்பாட்டின் காரணமாகவும் ஒரு முக்கியமான பங்காளி என்று குறிப்பிட்டார். 2021-22ல் இந்தியாவுடனான அதன் வர்த்தகம் 42 பில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்தது.


எங்கள் இருதரப்பு ஒத்துழைப்பின் முக்கிய துறைகளில் வலு ஆற்றல் உண்மையில் ஒன்றாகும். திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு உள்கட்டமைப்பு மற்றும் பல புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், மனித திறன் மேம்பாடு மற்றும் கூட்டு ஆராய்ச்சி ஆகிய வற்றில் முதலீடுகள் உட்பட 19 திட்ட வாய்ப்புகளை எரிசக்திக்கான கூட்டுப் பணிக்குழு கண்டறிந்துள்ளது என்றும் அவர் கூறினார்.

சவுதி இளவரசர் முகமது பின் சல்மானை சந்தித்த அமைச்சர், பிரதமர் நரேந்திர மோடியின் எழுத்துப்பூர்வ செய்தியை கையளித்து, அவரை இந்தியாவுக்கு அழைத்தார்.

ஜெய்சங்கர் சனிக்கிழமை ரியாத் வந்தார். அவரும் சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் பர்ஹான் அல் சவுத் அவர்களும் இருதரப்பு உறவுகளின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தனர்.

(மூலம்: 'த டிரிபியூன்')

# மீண்டும் இந்தியாவில் சிறுத்தைகள்








1948ல் இந்தியாவின் கடைசி சிறுத்தை (Cheetah) இறந்தது. அதன்பிறகு இந்திய நாட்டில் சிறுத்தை இனம் அழிந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் சிறுத்தை இனத்தை பெருக்கும் நோக்கில் நமீபியா நாட்டில் இருந்து 8 சிறுத்தைகளை இந்தியா பெற உள்ளது. சிறுத்தைகளை (அழைத்து வருவதற்காக புலி வடிவ டிசைனுடன் சிறப்பு விமானம் நமீபியா சென்றடைந்தது.

இந்திய நாட்டில் சிறுத்தைகள் இனமே இல்லை. கடைசியாக, சத்தீஸ்கரின் கோரியா பூங்காவில் இருந்த சிறுத்தை, 1948ல் இறந்தது. இதையடுத்து, 1952ல் இந்தியாவில் சிறுத்தைகள் இனம் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், தென்னாபிரிக்க நாடான நமீபியாவுடன் இந்தாண்டு ஜுலை 20ல் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதன்படி, நமீபியா அரசு ஐந்து பெண் மற்றும் மூன்று ஆண் என எட்டு சிறுத்தைகளை நம் நாட்டுக்கு நன்கொடையாக வழங்குகிறது. இந்த சிறுத்தைகள், மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவில் பராமரிக்கப்பட உள்ளன.

இதற்காக, சிறப்பு விமானத்தில் இந்த சிறுத்தைகள், நமீபியாவில் இருந்து, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு, வரும். 17 ஆம் திகதி காலையில் அந்த விமானம் வருகிறது. அங்கிருந்து ஹெலிக்கொப்டர் வாயிலாக, இந்த சிறுத்தைகள் மத்திய பிரதேசத்துக்கு எடுத்து வரப்பட உள்ளன. பிரதமர் மோடி தன் பிறந்த நாளான 17 ஆம் திகதி இந்தச் சிறுத்தைகளை, குனோ தேசிய பூங்காவில் திறந்து விடுகிறார்.

இதற்காக இன்று இந்தியாவில் இருந்து நமீபியா சென்றடைந்த சிறப்பு விமானத்தில் இந்தியாவின் தேசிய விலங்கான புலி வடிவில் டிசைன் செய்யப்பட்டுள்ளது. இந்த படங்கள் இணையத்தில் வைரலாகியுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir

# ஹிந்தி மொழியை இந்தியா திணிப்பதற்கு முன்பாக எமது உரிமைப்பிரச்சினைக்கு முடிவுகட்டவேண்டும்!

## தமிழ் பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சு.நிஷாந்தன் தெரிவிப்பு




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், செப். 16

இந்தியா ஹிந்தி மொழியைத் திணிப்பதற்கு முன்பாகவோ – அல்லது மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முன்பாகவோ – முதலில் எங்களுடைய தேசிய பிரச்சினையாக இருக்கின்ற உரிமைப் பிரச்சினைகளில் இந்தியா தலையிட வேண்டும் என தமிழ் பண்பாட்டுப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சு.நிஷாந்தன் தெரிவித்தார்.

யாழ் ஊடக அமையத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு கிழக்கில் தமிழ் மொழியை மேம்படுத்துவதற்கான எந்தத் திட்டத்தையும் இந்தியா மேற்கொண்டதாகத் தெரியவில்லை. தமிழ் சார்ந்த விடயங்களை புறக்கணித்து தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றும் வகையில் மதம் சார்ந்த விடயங்களையும் மொழி சார்ந்த விடயங்களையும் இங்கு திணித்துக் கொண்டிருக்கின்றனர்.

13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த இந்தியா வலியுறுத்துகின்றது. ஆனால் 13 ஆம் திருத்தத்தை முற்றுமுழுதாகத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கும் இந்தியாவின் ஆதரவில் இயங்குகின்றவர்களுக்கும் நாம் சொல்கின்ற விடயம், 13 என்பது தமிழ் மக்களின் இறுதித் தீர்வு கிடையாது. இடைக்கால அரசாங்கத்தில் 13 ஆம் திருத்தத்தை நாங்கள் நடைமுறைப்படுத்த முடியும். ஆனால் அது இறுதித் தீர்வல்ல.

இலங்கைஇந்தியாஒப்பந்தத்தில் வட கிழக்கு இணைத்திருப்பதாக எழுதப்பட்டிருந்தது. இந்திய தூதரகமோ இந்தியா சார்பானவர்களோ, இந்தி மொழியைத் திணிப்பதற்கு முன்பாகவோ அல்லது மதம் சார்ந்த நிகழ்ச்சிகளை அரங்கேற்ற முன்பாகவோ முதலில் எங்களுடைய தேசிய பிரச்சினையாக இருக்கின்ற உரிமைப் பிரச்சினைகளில் இந்தியா தலையிட வேண்டும். அவற்றை செய்ததன் பின்னர் வடக்கு கிழக்கை இணைத்து நான்கு வருடங்களாக இடம் பெறாமல் உள்ள மாகாண சபை தேர்தலை நடத்துங்கள்.

அந்த மாகாணசபை ஊடாக காணி பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக் கொடுத்துவிட்டு அதன் பின்னர் உங்கள் நிகழ்வுகளை இங்கே வந்து கொண்டாடுங்கள். நாங்களும் இணைந்து கொண்டாடுகிறோம். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றை நீக்குவதற்கு இந்தியா என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற கேள்வி எழுகின்றது. இந்தியா வடக்கு, கிழக்கில் ஆதிக்கத்தை செலுத்த வேண்டுமாக இருந்தால் இவ்வாறான திணிப்புகளை நிறுத்தி நமது கலாசாரத்தை சிதைப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும். அடிப்படை பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டு ஏனைய விடயங்களை பார்த் துக் கொள்ளலாம். – என்றார்.

ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமான நிலையில் அங்கு கருத்து தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்றியின் கருத்துக்கு கண்டனமும் தெரிவித்தார்.


திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING (CODL),
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

கலைமாணிபட்டப்படிப்பு 2018/2019
(வெளிவாரி)(புதியபாடத்திட்டம்)

BACHELOR OF ARTS DEGREE PROGRAMME – 2018/2019
(EXTERNAL) (NEW SYLLABUS)

**கலைமாணிபட்டப்படிப்புக்கான புதிய அனுமதி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த கலைமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்;படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்:**
க.பொ.த. உயர் தர பரீட்சை 2019 அல்லது அதற்கு முன்னர் அங்கீரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்து இருப்பதுடன் பொதுஅறிவுப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 30% மான புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்.

**அல்லது**

**NVQ**, டிப்ளோமாக்கள், மொழி டிப்ளோமாக்கள், சான்றிதழ்கள் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு ஏதேனும் தொடர்புடைய மற்றும் சமமானது என கருதப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள்.

**மாணவர்தெரிவு:**
விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை அல்லது பொது உளச்சார்புப்பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**
**1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர்**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**2. இணையதளத்தில் பெற விரும்புவோர்**
திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் இணையத்தளத்தில் (www.codl.jfn.ac.lk) தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்

**விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தல்:**
விண்ணப்பங்கள் யாவும் **எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் (89004214000 2143)** எனும் வங்கி கணக்கிலக்கத்திற்கு விண்ணப்ப கட்டணமாக **ரூபா 1000.00** செலுத்தி அதன் பற்று சீட்டின் மூலப்பிரதியினை விண்ணப்ப படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் இணைத்து கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
**பிரதிப் பதிவாளர்,**
**திறந்தமற்றும் தொலைக்கல்விநிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

**விண்ணப்ப முடிவுத்திகதி: 12.10.2022(புதன் கிழமை)**
**(விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது)**

மேலதிக விபரங்களுக்கு (www.codl.jfn.ac.lk) அல்லது 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**13.09.2022**


# ரணிலை ஜனாதிபதி ஆக்கினோம் எனப் பெரமுனவினர் தெரிவிக்கின்றமை கட்சிக்கொள்கைக்கு விரோதமானது

## நாலக கொடஹேவா கூறுகிறார்



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணியில் ஒன்றிணைய இதுவரை தீர்மானிக்கவில்லை.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெறுவதைத் தவிர்த்து ஏனைய திட்டங்கள் ஏதும் கிடையாது என முன்னாள் அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என்பதற்காகவே நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகபெரும, டிலான் பெரேரா மற்றும் ஜி.எல்.பீரிஸ் உள்ளடங்களாக 13 பேர் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுகிறோம்.

பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் 13 பேருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் குறிப்பிடுகின்றமை சிறுபிள்ளைத் தனமாகவுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினரான ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்கினோம் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் குறிப்பிடுகின்றமை கட்சியின் அடிப்படைக் கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது.

எமக்கு எதிராகப் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஏனெனில் நாங்கள் கட்சியின் கொள்கைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசாங்கத்தில் தவறான தீர்மானங்களால் பொதுஜன பெரமுன அரசியல் ரீதியில் மேலும் பலவீனமடையும்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தலைமையிலான மேலவை இலங்கை கூட்டணியில் ஒன்றிணைய இதுவரை தீர்மானிக்கவில்லை.

எமது அரசியல் ரீதியிலான தீர்மானத்தை உரிய நேரத்தில் அறிவிப்போம். மக்களால் கடுமையாக விமர்சிக்கும் தரப்பினருடன் ஒருபோதும் ஒன்றிணையப் போவதில்லை.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொள்பவர்களிடம் தெளிவாக ஒரு விடயத்தைக் குறிப்பிட்டுக்கொள்ள வேண்டும். ஜனாதிபதிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதை தவிர்த்து அவரிடம் ஏனைய பொருளாதாரத் திட்டங்களும் கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடுமையான நிபந்தனைகளை செயற்படுத்தினால் நடுத்தர மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும். இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை நாட்டு மக்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். ஆகவே இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தை அரசாங்கம் நாடாளுமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம். – என்றார்.

# அனைவருக்கும் பதிமூன்றும்



என்.சத்தியமூர்த்தி

ஜெனிவாவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலில் அண்டை நாடான இந்தியா பதிமூன்றாவது சட்டதிருத்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று முன் வைத்துள்ள கருத்துக்கள், இலங்கைத் தமிழர் தரப்பிற்கு மட்டுமல்ல, நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. என்ன, அதனை இந்தியாவிடம் கேட்டு வாங்கிய தமிழர் தரப்புகள், தற்போது தாளத்தை தம் விருப்பத்திற்கு மீண்டும் ஒரு முறை மாற்றி வாசிக்கின்றன. அவர்களுக்கு இது, மறுபடியும் தீவிரவாத தடை சட்டத்திற்கு எதிரான



ஜெனிவா அமர்வு.

ஏன், கவுன்ஸில் கூட்டத்தில், அரச தரப்பிற்கு தலைமை வகிக்கும் வெளியுறவு துறை அமைச்சர் அலி சப்றி, அவர்கள் கோரும் அரசியல் தீர்வை தடாலடியாக அறிவித்தால் கூட அவர்கள் ஏற்றுக் கொள்வார்களோ என்னவோ...! ஏனென்றால், அவர்களுக்கு தங்களது கோரிக்கையே மறந்து போய்விட்டது எனலாம்.

கடந்த ஜனவரி மாதம் ஏழு தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி, பதிமூன்றாவது திருத்தத்தை அப்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசு முழுவதுமாகச் செயல்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பினார்கள். ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் முன்னெடுப்பில் துவங்கிய அந்த முயற்சியில் ரவூப் ஹக்கீமும் மனோ கணேசனும் அசிங்கப்பட்டார்கள்.

அன்று இலங்கையில் நிலவிய அரசியல்கால, சூழல்களைக் கருத்தில் கொண்டு, இந்தியா, பதிமூன்று குறித்த தமிழர் தரப்பு கோரிக்கையை மனித உரிமை கவுன்ஸிலின் மார்ச் மாத அமர்வில் பெரிதாகக் குறிப்பிடவில்லை. ஏன், அன்றைய அரச தலைமையுடனோ, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனோ மட்டுமாக நிறுத்திவிடவும் இல்லை.

இலங்கையின் பிரச்சினைகள் என்பது, சர்வதேசத்திற்கு உணர்ச்சியற்ற புவிசார்ந்த அரசியல் மற்றும் பாதுகாப்பு கூறித்த முன்னெடுப்பு மட்டுமே. ஆனால், அண்டை நாடான இந்தியாவிற்கோ, இலங்கையின் அப்போதைய பொருளாதார நெருக்கடி, உணர்வு பூர்வமான விடயம். இது, இந்தியாவின் கரிசனையான உதவி திட்டங்களின் மூலம் வெளிப்பட்டது என்



பதை, தமிழர் தரப்பும் மறந்திருக்காது.

**சர்வதேச நிலைப்பாடு**

தற்போது, இலங்கையில் ஓர் அளவிற்காவது, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தோன்றியுள்ள சமயத்தில், இந்தியா, பதிமூன்று குறித்த தமிழர் தரப்பின் கோரிக்கையை தனது சர்வதேச நிலைபாடாகவே, ஜெனிவா விவாதங்களின் போதோ அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ஆனால், அது குறித்து சீண்டுவார், இலங்கை தமிழர்களிடையே தற்போது இல்லை.

அவர்களுக்கு, பயங்கரவாத தடை சட்டம்தான் சம காலத்திற்கான முக்கிய கடமை. அல்லது, பொழுதுபோக்கு.

உண்மையைச் சொல்லப்போனால், மேற்குலகு இட்டுள்ள கட்டளை. அந்தக் கட்டளையை சிரமேற்கொண்டு செயல்படுத்துவதில் அவர்களுக்கு இடையே மீண்டும் போட்டி நிலவுகிறது. ஒருவர் இலண்டனுக்கு சென்றால், மற்றொருவர் தனது குட்டிப் படையுடன் ஜெனிவா செல்கிறார்.

அது போன்றே, கூட்டமைப்பு பேச்சாளரான சுமந்திரனும் மேற்குலக நாடுகளின் தீர்மான வரைவை முடிவு செய்யும் கூட்டங்களில் பங்கெடுக்க, அவர்களது அழைப்பின் பேரில் சென்றுள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன. சுமந்திரனின் புலமை மற்றும் கடமை உணாச்சி மீது யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. இருக்க கூடாது.

ஆனால், சுமந்திரனின் கூற்றிற்கு, அவர் சார்ந்த தமிழரசு கட்சியிலோ, அல்லது தமிழ் தேசிய கூட்டமைப்பிலோ பலரும் செவிசாய்ப்பதில்லை. அவர் கூறினார் என்ற ஒரே காரணத்திற்காக, எடுத்த முடிவுகளில் ஓட்டை காண்போரே இங்கு அதிகம். அப்படியானால், ஜெனிவாவில் சுமந்திரன், மேற்குலக நாடுகளின் ஆலோசகராக மட்டுமே செயல்படுகிறாரா, என்ன?

**வாய்கிழிய பேச்சு**

ஜெனிவாவில், இந்தியாவின் சுருக்கமான அறிக்கையை எத்தனை தமிழ் தலைவர்கள் நெருக்கமாக படித்தார்கள் என்று தெரியவில்லை. எப்போது அந்த அறிக்கையில், அவர்களின் தற்போதைய 'அஜெண்டா ஐட்டங்களான' பயங்கரவாதத் தடை சட்டம் மற்றும் பொறுப்புக் கூறல் பிரச்சினைகள் இடம் பெறவில்லை என்று பிறர் கூறி தெரிந்ததோ, அப்போதே கூட அவர்களில் பலரும், இந்திய அறிக்கையை ஏறெடுத்தும் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஏன், அவாகளில் ஒரு சிலராவது, இனப்பிரச்சினைக்கான தீர்வாக 'இந்திய மாடல்' அரசியல் மற்றும் அரசியல் சாசன தீர்வு குறித்து வாய்கிழியப் பேசி வந்த காலத்திலேயே, அது குறித்து அரிச்சுவடி அறிவு கூட இல்லாமலே இருந்தார்கள். இன்றும் கூட அவர்கள் அவ்வாறே தொடர்ந்தால், ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இன்று பதிமூன்றாவது சட்ட திருத்தம் இலங்கை அரசியல் யாப்பின் ஒரு பகுதியாகி முப்பத்தைந்து ஆண்டுகள் ஆன பிறகும் கூட, அது முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், முதலில் மாகாணங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த சில – பல அதிகாரங்கள் கூட கடந்து போன காலகட்டத்தில் இல்லாமல் ஆக்கப்பட்டுவிட்டன. ஆனால், அவை எதுவுமே, யாப்பின் திருத்தங்கள் மூலம் செய்யப்பட்ட மாற்றங்கள் அல்ல. அதிரடியாக அரச தலைமைகள் மட்டுமே செயல்படுத்திய விடயங்கள்.

**பரவலான பகிர்வு**

ஜெனிவாவில் பதிமூன்று குறித்து இந்த முறை பேசும் போது, இந்தியா, இலங்கையின் கடன் – பொறி பிரச்சனைகள் குறித்தும் கோடிட்டு காட்டியிருந்தது. ஆனால், அதற்காக சீனாவைப் பெயர் சொல்லி சீண்டவோ, மற்றபடி தாக்கவோ இல்லை.

மாறாக, இது போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளை நாடு மீண்டும் எதிர்கொள்ளாதிருக்க அனைத்து மக்களுக்கும் பரவலான அதிகார பகிர்வு இருக்க வேண்டும் என்று இந்தியா கூறியுள்ளது. அதாவது, எங்கேயோ, கொழும்புவில் இருக்கும் அரசு மற்றும் அரசியல் தலைமைகளோடு நின்று விடாமல், நாட்டின் எதிர்காலம் குறித்த அனைத்து திட்டங்களிலும் முடிவுகளிலும் மக்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

இது தானே, அறகலயா போராட்டக்காரர்களின் கோரிக்கையாகவும் இருந்தது. அந்த விதத்தில், அறகலயா போராட்டக்காரர்களின் கோரிக்கைக்க செயல்வடிவம் கொடுப்பதற்கு பதிமூன்றாவது திருத்தமே சிறந்தது, அதிலும் தயாராக இருக்கிறது என்பதனை இந்தியா சுட்டி காட்டி இருக்கிறது.

அதாவது, நாட்டின் மக்களின் பிரச்சினைகளுக்கு அதிகாரப் பரவலே தக்க முடிவு என்று ஜெனிவாவில் இந்தியா, இலங்கைக்கு ஆலோசனை கூறியுள்ளது. இது தொடர்பாக இந்தியா குறிப்பாக பதிமூன்றாவது திருத்தம் கூறித்து நேரடியாக பேசவில்லை என்றாலும், இந்தியா கூறாமல் விட்ட செய்தியும் அது தான்.

இதற்கு அப்பால் சென்று நோக்கினால், பதிமூன்றை செயல்படுத்துவதற்கு, புதிய அரசியல் சட்டமோ, அல்லது தற்போதைய யாப்பில் புதிய மாற்றங்களோ தேவையில்லை. அவ்வாறு புதிய அரசியல் சட்டம் என்று கூறியேதான், முந்தைய மைத்திரி – ரணில் தலைமையும், பின்னர் வந்த கோட்டபாயவின் ராஜபக்ஷக்களின் அரசும் மக்களை ஏமாற்றி வந்தது.

அதிலும் குறிப்பாக முந்தையவர்கள், தமிழர்களை ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கில்தான், புதிய அரசியல் நிர்ணய சபையை கூட்டி, அதில் வரைவு யாப்பு ஒன்றையும் முடிவு செய்தனர். அதற்கு சுமந்திரன் உள்ளிட தமிழர் தலைமைகளின் பாரிய பங்களிப்பும் இருந்தது.

ஆனால், அந்த யாப்வை நிறைவேற்ற நாடாளுமன்றத்திலும் சரி, சர்வஜன வாக்கெடுப்பிலும் சரி, சிங்கள – பௌத்த தரப்புகள் தயாரில்லை என்பதும் அவாகள் அனைவருக்கும் தெரிந்திருந்தது என்பதே உண்மை. யாரை ஏமாற்ற அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்!

**கையெழுத்து வேட்டை**

இதற்கு இடையில், தீவிரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக நாடு தழுவிய கையெழுத்து வேட்டையை சுமந்திரன் போன்றோர் முன்னெடுத்துள்ளனர். கொள்கை ரீதியாக அது வரவேற்கப்பட கூடியதாக இருக்கலாம். ஆனால், அரசியல் ரீதியாக, இந்த முன்னெடுப்புக்கு, தலைநகர் கொழும்பிற்கு அப்பால், தென்னிலங்கையினரின் ஆதரவு இருக்குமா என்பது கேள்விகுறியே.

இதற்கான காரணங்களும் தமிழர் தரப்பு அறியாத விடயமல்ல. இனப்போர் முடிந்து பதிமூன்று ஆண்டுகள் முடிந்து விட்டாலும், மிதவாத கூட்டமைப்பு தலைமை உள்ளிட்ட தமிழர் தரப்பினர் எவரையுமே அவ்வாறு நினைக்க தென்னிலங்கை சமூகம் இன்னமும் தயாராயில்லை. இன்னும் சொல்லப்போனால், தாங்கள் விடுதலை புலிகளின் அரசியல் வாரிசுகள் அல்லர் என்பதனை அறைகூவல் விடுத்து அவர்களிடம் எடுத்துச் செல்ல தமிழர் தரப்பும் எப்போதுமே முயன்றதில்லை.

அவ்வாறு இருக்கையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்து, தமிழர் தரப்பு முன்னெடுத்துள்ள கையெழுத்து வேட்டைக்கு, தென்னிலங்கையில் ஆதரவு இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. இல்லையென்று, கூட்டமைப்பின் கூட்டணி கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கட்சி போன்றோர் பங்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். ஆனால், அதற்கு அப்பாலும் சென்று, கூட்டமைப்பும் பிற தமிழ் அரசியல் கட்சிகளும் சமூக அமைப்புகளும் தென்னிலங்கையிலும் இனியாவது செயல்பட வேண்டும்.

அந்த வகையில், தென்னிலங்கையை சென்றடைய, தற்போதைய அறகலயா போராட்டத்திற்கு பின்னரான காலகட்டத்தில், தமிழர் தரப்பிற்கு மாகாணங்களுக்கான அதிகார பரவலே அதிக பயனுள்ளதாக இருக்கும். எப்போது, தமிழர் தரப்பினரில் பலரும், 'ஒன்றுபட்ட இலங்கையினுள் அதிகார பரவல்' என்ற இந்தியாவின் பல ஆண்டு காலமான நிலைபாட்டை ஏற்றுக் கொண்டுள்ளனரோ, அதன் அடிப்படையில் ஒரு தேசிய இயக்கமாகவே குறுகிய காலத்திலேயே மாற்றி அதில் வெற்றிபெறவும் முடியும்.

இதற்காக, யாரும் இன்னுமொரு அறகலயா போராட்டத்தை துவங்க வேண்டாம். மாறாக, அரசியல் பிரிவுகளுக்கு அப்பால், நாடு முழுவதும் அனைத்து கட்சி கூட்டங்களை நடத்தி மக்களிடம் இந்த செய்தியை கொண்டு செல்ல வேண்டும். அது போன்றே, நாடாளுமன்றத்தின் உள்ளும் புறமும் இது குறித்துப் பேச வேண்டும்.

அதை விடுத்து, இந்த அரசும் புதிய யாப்பு என்று பேசுவதற்கு விட்டால், தமிழர் தரப்பிற்கான அரசியல் அதிகாரம் என்றுமே கிடைக்கப் போவதில்லை என்பது நிச்சயம். அத்துடன் அவர்களுடைய தென்னிலங்கை ஆதரவாளர்களும் சரியான நேரத்தில் அவர்களைக் காலை வாருவார்கள். அதுதானே அவர்களது கடந்த கால அனுபவம்?

இவை அனைத்தையும் விடுத்து, பதிமூன்றிற்கும் – அப்பால் என்று தமிழர் தரப்புகள் மீண்டும் குரல் எழுப்புமேயானால், அதற்கு, இலங்கை அரசிடம் இருந்து பெரிதான எந்த முடிவையும் எதிர்பார்க்க முடியாது. காரணம், கடந்த காலங்களில், மஹிந்த ராஜபக்ஷ அரசு மற்றும் ரணில் தலைமை ஆகியவற்றுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டு, அதற்கு பின்னரும் தங்களுக்கு பதிமூன்றே போதும் என்று இந்தியாவிடம் இவர்களே கூறியுள்ளார்கள்.

ஏன், இடைப்பட்ட வருடங்களில், இந்தியாவும், பதிமூன்று என்ற பதத்தை பயன்படுத்தாமலே, தமிழ் மக்களுக்கான அதிகபட்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறிவந்தது. ஆனால், அதனைத் தடலடியாக மாற்றிக் கொண்டது, தமிழர் தரப்பு மட்டுமே. இந்தியா அல்ல!


உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

நல்லூர் பெருந்திருவிழாக் காலத்தை முன்னிட்டு நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கட்டுரை போட்டியில் முதல் நிலை பெற்ற மூன்று ஆக்கங்கள் இங்கே இவ்வாரம் பிரசுரமாகின்றன.

## வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்



வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான். வாசிப்பதனால் அறிவு மாத்திரமின்றி படைப்புக்கள், கற்பனைத்திறன், பொறுமை மற்றும் சஞ்சலமற்ற மனப்பாங்கு போன்ற நல்ல குணங்களை உருவாக்குகின்றன. ஒரு மனிதனுக்கு தலைமுடி அழகோ அல்லது தோற்ற அழகோ அழகில்லை. கல்வி அழகும் வாசிப்பழகுமே அழகு. நாம் எவ்வளவு ஆழமாக தோண்டினால் நீரானது சுரக்குமோ அவ்வளவு நாம் நூல்களை தேடி அறிந்து வாசிக்க வேண்டும் என 'பொய்யாமொழிப்புலவர் ' கூறியுள்ளார். "**Leaders are Readers**" என்று கூறுவார்கள் படிப்பகங்களுக்கு அருகில் உறங்க வேண்டும் என்றார் அம்பேத்கர். எமது நாட்டில் மிகப்பெரிய இடத்தில் இருப்பவர்கள் தாம் இவ்நிலைக்கு நாம் வாசிப்பாலும் கல்வியாலும் தான் இவ்வாறு இருக்கின்றோம் என்பார்கள். ஆகையால் நாம் வாசிப்பத்திறனை மேம்படுத்த வேண்டும்.

இக்கால கட்டத்தில் சமூக வலைத்தளங்கள் பாவனையால் வாசிப்புதிறன் வெகுவாக குறைந்து வருகிறது. ஆகையால் நாம் நூல்களை தேடி எடுத்து வாசிப்புத்திறனை மேம்படுத்த வேண்டும். வாளினுடைய கூர்மையும் நூலினுடைய கூர்மையும் தான் நாட்டை ஆளும். ஆகையால் நாம் நூல்களை தேடி அறிந்து வாசித்து நாட்டை ஆள வேண்டும். எமது நாட்டில் பெரியவர்களாக இருக்கும் பொய்யா மொழிப்புலவர், அப்துல் கலாம், அம்பேத்கர், அறிஞர் அண்ணா ஆகியவர்கள் வாசிப்பினாலும் கல்வியினாலும் தான் மிகப்பெரிய இடத்தில் இருக்கின்றார்கள்.

தான் வாசித்த புத்தகத்தை வாசித்து முடிக்க வேண்டும் என்பதற்காக அறுவை சிகிச்சையையே தள்ளிப்போட்டார் அறிஞர் அண்ணா. வாசிப்பு பழக்கம் குறைந்து வருவதால் நூலகங்களும் நூலகளும் குறைந்து வருகின்றன. நாம் சமூக வலைத்தளங்களில் ஈடு கொடுப்பதை தவிர்த்து விட்டு நூல்களை தேடுவதிலும் அதனை வாசிப்பதிலும் ஈடு கொடுக்க வேண்டும். காந்தியடிகள் தமக்கு மிகப்பெரிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் புத்தகங்களே தந்தன எனக் கூறியிருந்தார். ஔவையார் 'நாலடியார்' எனும் புத்தகத்தில் வாசிப்பையும் கல்வியையும் சிறப்பித்து பாடியுள்ளார்.

எமக்கு மிகப்பெரிய கௌரவத்தையும், அழகையும், அறிவையும், தன்னம்பிக்கையும், மகிழ்ச்சியையும் கொடுப்பது கல்வியும் வாசிப்பும்தான் காரணம். கல்வி அறிவு மாத்திரம் அழகில்லை வாசிப்பறிவும் சேர்ந்தாலே அது அழகு. மாணவர்களாகிய நாம் கல்வியையும் வாசிப்பையும் மேம்படுத்த வேண்டும். அப்துல் கலாம் ஐயா அவர்கள் வாசிப்பதனால் பாரதத்தையும் ஆளலாம் எனக் கூறினார். ம

எமது காலகட்டத்தில் பணமோ அல்லது அழகோ முன்னிலையில் இல்லை. கல்வியும் வாசிப்பும் தான் முன்னிலையில் உள்ளது. வாசிப்புத்தான் ஒரு மனிதனைப் பூரணமடையச் செய்கிறது. அதனால் நாம் நூல்களை வாசித்து பூரணமடைந்த மனிதராக மாற வேண்டும்.

வாசிப்பே ஒரு மனிதனின் செல்வம். அதாவது பணச்செல்வத்தை விட வாசிப்பு செல்வமே ஒரு மனிதனை மேலோங்க செய்கின்றது. மாணவர்கள் மாத்திரமின்றி இன்று சமூகமும் வாசிப்பை மேம்படுத்த உதவி புரிய வேண்டும். ஆகையால் நாம் நூலகங்களுக்குச் சென்று கதைகள், கட்டுரைகள், நாட்டு நடப்புக்கள் போன்ற கட்டுரைகளை வாசித்து எமது பெரியோர்கள் போன்று மேலான இடத்தில் இருக்க வேண்டும். நீங்கள் உங்கள் சமூகத்திலுள்ள மாணவர்கள் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி கூறி வாசிப்புத்திறனை மேம்படுத்த வேண்டும். எமது நாட்டில் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதர்கள் கல்வி கற்க ஆரம்பித்தனர். ஆனால் எமது காலத்தில் சமூக வலயத்தலத்தால் வாசிப்பு மிகவும் குறைந்து வருகின்றது என்றால் எமது எதிர்கால சந்ததியினருக்கு வாசிப்பே இல்லாமல் போக வாய்ப்புண்டு. அதனால் வாசிப்புப் பழக்க வழக்கத்தினை மேம்படுத்தி வாசிப்பின் நன்மையை கருதி வாசிப்பை தொடர வேண்டும்.

- வசந்தகுமார் திஸ்வியா -
(யாழ் .இந்து மகளிர் கல்லூரி)

## ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்!



ஏழை என்பவன் இறைவனுக்கு சமனானவன். நாம் ஏழையை அவமானப்படுத்தினாலோ, தூற்றினாலோ அது இறைவனை தூற்றுவதற்கோ, அவமானப்படுத்துவதற்கோ சமமானது.


ஏழை என்பவன் கள்ளங்கபடமற்றவன். அவன் மனதில் கள்ளத்தன்மையோ, பொறாமை குணமோ காணப்படாது. நாம் இறைவனுக்கு அதிகமான பணம் கொடுத்து, தங்கச் சிலை வாங்கிக் கொடுக்கின்றோம். பல வகையான உணவுகளைப் படைத்துக் கொள்கின்றோம். அதெல்லாம் எமது மனத்திருப்திக்கு செய்வது. ஆனால் நாம் வாசல் தேடி வந்து 'அம்மா பசிக்குது' என்று கேட்போருக்கு உணவு கொடுத்தோமானால் அந்த உணவு இறைவன் உண்பதற்கு சமமாகும். இறைவனும் மிகவும் சந்தோசப்படுவான்.

நாம் எமது பிறந்தநாளில் பட்டாடை வாங்கி உடுத்து, பிறந்த நாளுக்கு உறவினரை அழைத்து உணவு கொடுக்கின்றோம். ஆனால் அவர் உண்டு முடித்து அதை எப்போது திருப்பிக்கொடுப்போம் என்று தான் பார்ப்பார்கள். ஆனால் அத்தகைய உணவை நாம் ஊர் அநாதை இல்லத்திற்கோ இல்லையன்றேல் ஓர் ஆச்சிரமத்திற்கோ கொடுத்தோமானால் அது எமக்குப் புண்ணியம். ஏழையானவன் எமது உணவை வாங்கி கொண்டு எமது முகத்தைப்பார்த்து ஒரு சிரித்து சிரித்து விட்டு 'அம்மா நீ நல்லா இருப்பாய்!' என்று சொல்வான். அப்போது அந்தவாக்கு எமக்கு இறைவனையே கண்டதுக்கு சமமாகும். ஏழையின் சிரிப்பில் நாம் எப்படி இறைவனைக் காண்கின்றோம் என்பது ஒரு சிறந்த உதாரணம், தரம் 3 பாடப்புத்தகத்தில் உள்ளது. என்னவென்றால் ஒரு ஊரில் கோயில் அருகாமையில் இரு நண்பர்கள் கடை வைத்திருந்தார்கள். அவர்களுள் ஒருவர் நந்தன். மற்றொருவன் கோபாலன். ஒருநாள் ஓர் ஏழை மனிதன் நந்தனிடம் வந்து தேங்காய் கேட்டபோது உனக்கு இங்கு தேங்காய் இல்லை என்று கூறினான். பின் அந்த ஏழை மனிதன் கோபாலன் கடைக்கு சென்று தம்பி ஒரு தேங்காய் தா அப்பா என்று கேட்டான். உடனே கோபாலன் ஒரு தேங்காய் எடுத்துக்கொடுத்து ஐயா எனக்கு காசு வேண்டாம் நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் என்றான். அப்போது அந்த மனிதன் நீ நீடூழி வாழ்வாய் என்று வாழ்த்தி மறைந்தான். அது வேறு யாரும் இல்லை வந்தது சிவபெருமான். அன்றிலிருந்து கோபாலன் வசதியாக வாழ்ந்தான். நந்தன் வறுமைக்கு உள்ளானான். இதற்கு நாம் ஒரு நாளும் ஏழையை தூற்றக்கூடாது என்பது.

ஏழை என்பவன் நேர்மையாக உழைத்து வாழ்பவன். அறத்திலும் பெரிய அறம் தர்மம் ஆகும். தர்மம் செய்தல் அறத்திற்கு மேலானது. நாம் இவ்வளவு வசதியாக இருப்பது பெரிய விடயமன்று. அத்தகு வசதியாக யாரும் வரலாம். ஆனால் நாம் ஏழைக்கு செய்யும் தர்மம் இறைவனுக்கு மேலானது. எமது உறவினர் வாங்கும் வரையும் தான் எம்மோடு உறவாடுவார்கள். ஆனால் ஏழைகள் அப்படியல்ல. காலம் முழுவதும் நம்மை ஆசீர்வதித்துக்கொண்டிருப்பார்கள். நாம் இறைவனுக்கு செய்வது இறைவனைப்போய் சேர்வதில்லை. ஆனால் ஏழைக்கு அதைச் செய்தோமானால் அது இறைவனை சென்றடையும். ஏழை என்பவன் இறைவனுக்கு சமனாவான். ஏனெனில் உற்றார் உறவினர், வீடு வாசல் இன்றி நிர்க்கதியாக வாழ்பவர்களுக்கு இறைவனே துணையானவன். ஏழையானவனுக்கு ஒரு பிடி சோறு கொடுத்தோமானால் அவன் சிரிப்பில் இறைவனை பார்ப்போம். அவனுக்கு அந்த பிடி சோறு இறைவனை கண்டது போல் இருக்கும்.

எமது வீட்டில் அந்தியேட்டி, திவசம் இடம் பெறும் காலத்தில் உறவினர் அழைத்து உணவு கொடுக்கின்றோம். அதை பார்சல் பண்ணி ஒரு ஏழை வாழும் கிராமத்துக்கு கொடுப்போமானால் அம்மக்களுக்கு இறைவனே இறங்கி வந்து உதவுவது போல் காட்சியளிப்போம் நாங்கள். எங்களுக்கு அவர்களின் சிரிப்பில் இறைவனைக் காண்பது போலவே இருக்கும். நாம் இனிவரும் காலத்தில் இத்தகை நாளில் தானதருமம் செய்தல் மிகவும் நல்லது. அத்தோடு இறந்தவர்கள் ஆந்த சாந்தியும் புண்ணியமும் கிடைக்கும். சிறுவர்களாகிய நாம் ஏழைகளுக்கு உதவுதல் நன்று. அப்படி உதவி செய்து அவர்களின் சிரிப்பில் நாம் இறைவனைக் காண்போம்.

- சுரேஸ் மயூரகா -
(யாழ் . இந்து மகளிர் கல்லூரி)



## மனதில் உறுதி வேண்டும்


மனதில் உறுதி வேண்டும், வாக்கினில் இனிமை வேண்டும், நினைவில் நல்லது வேண்டும், கனவு மெய்ப்பட வேண்டும், காரியத்தில் உறுதி வேண்டும் என்பது மகாகவி பாரதியாரின் பாடலடிகள். மனதில் உறுதியுடன் வாழ்ந்து வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்ய வேண் டும். வாழ்க்கையில் வெற்றி பெற முயற்சியும் இடைவிடாத பயிற்சியும் தேவை. மன உறுதியுடன் செயற்படும் ஒருவர் வாழ்க்கைப் படிநிலைகளில் ஏற்கப்படுவார்.

வாழ்க்கையில் மனிதராக பிறந்த ஒவ்வொருவருக்கும் ஏதோ காலகட்டத்தில் சோதனைகளுக்கு ஆளாக்கப்படுவர். அந்த நேரங்களில் மனம் தளும்பாது ஏற்படும் வலிகளை வலிமையாக்கி தடைகளைத் தாண்டிச் செயற்பட வேண்டும்.

உறுதியான வேர்களை உடைய மரங்கள் எந்த புயல் காற்று வீசினாலும் அசைந்து விழுவதில்லை. அதைப்போல உறுதியான மனம் உடையவர் எவ்வித தடைகள் வந்தாலும் முடங்கி இருக்காது, சோதனைகளை தாண்டி சாதனை படைப்பார். 'துன்பம் உறவரினும் செய்க துணிவு அற்றி இன்பம் பயக்கும்' துன்பம் வரினும் இறுதியில் இன்பம் வரும் இறுதியாக இருக்க வேண்டும்' வாழ்க்கை என்றால் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை. எதையும் தாங்கும் மனம் இருந்தால் கடைசி வரை அமைதி நிலைக்கும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு வாழ்ந்தால் எந்தச் சந்தர்ப்பத்திலும் தோல்வி என்பது ஏற்படாது.

எம் வாழ்க்கையில் விட்டு போனது போகட்டும், காயங்கள் ஆறட்டும், கவிதைகள் வழியே நிம்மதி தேடட்டும். காதல் மாயை தெளியா போதை. இன்றைய காலகட்டத்துக்கு பிரஜைகள் காதல் என்ற மாயைக்கு அடிமையாகி உள்ளனர். இந்த மாயைக்கு அடிமையானவர்கள் தாம் இலக்கை இழப்பர். நாம் வாழ்க்கையில் இப்படி இருக்க வேண்டும், அப்படி வாழ வேண்டும் என்ற எண்ணங்களுடனும் கனவுகளுடனும் இருப்பர்.

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)



# விடியலின் விருட்சம் அஷ்ரஃப்

**ஒரு சமூகத்தின் விடியலுக்காய்ப் போராடி, விருட்சத்திற்கு உரமாய்ப்போன ஒரு தலைவனின் 22ஆவது நினைவு நாளில் அவர் பற்றிய ஒரு சிந்தனைப் பகிர்வு இது.**



எம்.என்.எம்.யஸீர்
அறபாத்
(ஓட்டமாவடி)

இலங்கையில் மூன்றாவது பெரும்பான்மையான முஸ்லிம் சமூகம் தொன்று தொட்டு இந்த நாட்டிற்கு விசுவாசமாகவும், நாட்டின் அபிவிருத்தி, வளர்ச்சி போன்றவற்றில் கணிசமானளவுது பங்களிப்புச் செய்திருக்கிறது.

இந்தச் சமூகத்தில் பலர் நாட்டிற்காக உயிர்த்தியாகம் செய்த வரலாறும், மன்னர் காலந்தொட்டு நடைபெற்று வந்திருக்கிறது.

இவ்வாறான சமூகம் பெரும்பான்மைக் கட்சிகளோடு இணைந்தே தங்களின் அரசியல் பயணத்தைத் தொடர்ந்து கொண்டு சென்றன.

அதே நேரம், தமிழர்கள் தங்களின் உரிமைகளுக்காக தனிக்கட்சி அமைத்து போராடிக்கொண்டிருந்தார்கள். காலவோட்டத்தில் அரசியல் போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாற்றம் கண்டது.

ஆயுதப்போராட்டங்களில் முஸ்லிம் இளைஞர்களும் நாட்டம் கொள்வதைத் தடுக்குமுகமாக அரசியல் நீரோட்டத்தில் முஸ்லிம் இளைஞர்களையும் இணைத்துக்கொண்டு அரசியல் பயணத்தை ஆரம்பித்தார் அஷ்ஃப்.

காத்தான்குடி மண்ணில் ஓர் அமைப்பாக இருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கம் அஷ்ரஃப்பிடம் 1980/81 காலப்பகுதியில் ஒப்படைக்கப்பட்ட போது, 1986 இல் அஷ்ரஃப்பினால் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தப்பட்டு பதிவுசெய்யப்பட்டது. அன்றிலிருந்து தொடங்கிய சமூக விடுதலைப் போராட்டம் இன்று வரை பல சவால்களுக்கு மத்தியில் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

அன்று, இவ்வாறான சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் அடிக்கடி பேரினவாதிகளாலும் தீவிரவாதிகளாலும் துன்பங்களை எதிர்நோக்க நேர்ந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பேரினக் கட்சிகளைப் பிரதிநித்துவம் செய்த முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எதனையுமே செய்ய முடியாத சூழ்நிலையில், முஸ்லிம் சமூகத்திடம் அபிப்பிராயம் பெறப்படாமல் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வாக இந்தியா – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன் மூலமாக இலங்கை அரசமைப்பில் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டு மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு ஒரு மாகாணமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

தமிழர் தரப்பு முஸ்லிம்கள் தனித்துவமான சமூகம் என்பதை ஏற்க மறுத்து, தமிழ்ப்பேசும் சமூகமாகக் காட்டமுனைந்தது. இதனால் உரிமை இழந்த சமூகமாக முஸ்லிம் சமூகம் மாற்றம் பெறும் போது தான் பலர் விழித்துக் கொண்டு தனி வழி அரசியல் அல்லது தனிக்கட்சி அரசியல் தொடர்பாக பல முயற்சிகள் செய்தும் அவை பெரியளவில் வெற்றி பெறாத நிலையில் தான் கிழக்கு மண்ணிலிருந்து ஒரு குரல், அது தான் அஷ்ரஃப் எனும் உரிமைக்குரல் ஓங்கி ஒலித்தது.

அரசியல் பயணத்தின் ஆரம்ப கால கட்டத்தில் உயிரச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தன்னைக் கொல்வார்கள் என்று தெளிவாகத் தெரிந்த நிலையிலும், பல தடவைகள் தன்னைக்கொல்ல முயற்சிகள் நடந்த சந்தர்ப்பத்திலும் சமூக விடுதலையை நோக்காகக் கொண்டு இந்த பயணத்தைத் தொடர்ந்திருந்தார்.



அரசியலில் மூத்தவர்கள், பேரினக்கட்சித் தலைவர்கள் அஷ்ரஃப்பின் போராட்டத்தை நக்கலாகப் பார்த்த போது பிற்காலத்தில் அவர்களுக்கே விக்கல் வரச்செய்தவர் அவர்.

இறை துணையோடு போராளிகளின் பலத்தோடு களம் கண்டவர். பிற்காலத்தில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக அரசியலில் முஸ்லிம் சமூகத்தை மாற்றியவர். தனித்துவம், உரிமை என முஸ்லிம்களும் இந்த நாட்டில் வாழும் தனி இனம் என அடையாளப் படுத்தினார். முஸ்லிம் சமூகத்திற்கு தங்களின் பலத்தை தங்களையே உணர்ந்துகொள்ளச்செய்தார்.

தமிழ்ச்சமூகத்தோடு நட்புறவு பாராட்டினார்.




அவர்களின் அபிலாகைளுக்கு குறுக்கே நிற்காது முஸ்லிம் சமூகத்தின் நியாயமான உரிமைகளைக் கோரி நின்றார்.

ஜனாதிபதி சட்டத்தரணி, கவிஞர், பாடலாசிரியர், பேச்சாளர் எனப்பல ஆளுமைகளைக் கொண்டவர். அரசியலிலும் முக்கிய அமைச்சுக்களால் அலங்கரிக்கப்பட்டார். அரசியலில் அவரின் அதிகார காலம் குறுகியதாக இருந்தாலும், இன்றும் நினைத்துப் பேசுமளவிற்கும் வியந்து பார்க்குமளவிற்கும் தடம்பதித்து விட்டுத்தான் மறைந்திருக்கிறார்.

இலங்கை அரசியல் வரலாற்றிலும் முஸ்லிம் சமூக அரசியலிலும் தனக்கான இடத்தைப் பிடித்திருக்கிறார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராகவும் இருந்திருக்கிறார். அவர் வளர்த்த மரத்தில் தான் பலர் அரசியல் முகவரி பெற்றிருக்கிறார்கள். அதிலும் சிலர் நோகாமல் நொங்கு குடிக்கிறார்கள்.

அன்று அஷ்ரஃப்பும் அவரோடு இணைந்து பலர் செய்த உயிர், உடைமை, பொருளாதாரம் போன்ற தியாகங்களால்தான் இன்றும் இந்த இயக்கம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இன்றைய சூழ்நிலையில் முஸ்லிம் அரசியல் தொய்வுநிலையை அடைந்திருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையேற்று பல சவால்களுக்கு மத்தியில் இந்த நெருக்கடியான காலகட்டத்திலும் நாட்டிற்காக நாட்டு மக்களுக்காக தன் சமூகத்திற்காக குரல் கொடுக்கும் தலைவராக அன்று தலைவர் அஷ்ரஃப் அடையாளங்காட்டிய தலைவர் ரவூப் ஹக்கீம் திகழ்கிறார்.



இன்றைய முஸ்லிம் அரசியல் தொய்வுநிலையிலிருந்து மீட்டு அடுத்த சந்ததிகளுக்கு சமூக அரசியலில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக எதிர்காலச் செயற்பாடுகளை ரவூப் ஹக்கீம் முன்னெடுக்க வேண்டுமென்பது பலரது எதிர்பார்ப்பாகும் என்பதை இந்த நாளில் நினைவுபடுத்திக் கொள்கிறோம்.

அஷ்ரஃப் என்ற விருட்சம் 22 வருடங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் மனங்களில் வாழும். தலைவருக்காகப் பிரார்த்திப்போம்!

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 124

**ஈ.பி.ஆர்.எல்.எவ்.**

இந்தியா, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) குழுவினரை வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரத்தில் அமர்த்தியமையும், அவர்களுக்குப் பாதுகாப்பு தந்தமையும் அவர்கள் இந்திய தரப்பின் முகவர்களாக செயல்படுவதற்கே என்றும் –



பிரேமதாஸா

அது இந்திய ஆக்கிரமிப்பின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட்டு, இந்தியா வெளியேறி தமிழ் மக்களின் ஏகோபித்த தலைவர்களான விடுதலை புலிகளிடம் அதிகாரம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் – ஏதோ ஒரு விதமாக இந்தியாவிலிருந்து வெளியேறிய மதியுரைஞரும் அவர் மனைவியும் பிரசாரம் செய்தனர்.

வெளியேறிய காலம் தொட்டு அவர்கள் இருவரும் புலம்பெயர் மக்களையும், அவர்களது ஆதரவாளர்கள் ஏற்படுத்திய அரசு, அரசு சாரா நிறுவனங்களின் அதிகாரிகளையும் சந்தித்து இந்தியாவின் உள்ளீட்டினாலும் நிர்பந்தங்களாலும் நடைபெறும் விபரீதங்களை விளக்கங்களைத் தந்தனர்.

மக்களின் ஆதரவின்றி ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்துக்கு அமர்த்தியமை, இதனால் விடுதலை புலிகளுக்கும் அவர்களுக்கும் நடைபெற்ற சமர்கள், அவற்றில் எழுந்த கொலைகள் எல்லாம் இந்தியத் தரப்பின் தூண்டுதல்களில் – முக்கியமாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் குறிவைத்து – நடத்தப்படுகின்ற எனச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தியப் படைகள் வெளியேறும் வரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நடக்கக் கூடியதாக தெரியவில்லை என்பது அவர்கள் வாதமாகவும் இருந்தது.

ஆனால் பக்கத்து சிங்கள தேசத்தில் அவர்களது இறைமைக்கு சவாலாக வந்த இந்தியாவை இந்தியப் படைகளின் இருப்பால் தங்களது பௌத்த தார்மீக தேசம் அழிந்துவிடும் என்று நின்றவர்கள், பின்னர் சாதுரியமாக நிலைமைகளை ஆராய்ந்து, புத்திசாலித்தனமாக அவர்களை தங்களது அனுகூலத்துக்குப் பாவிக்கிறார்கள், ஆனால் தமிழ் மக்கள் அப்படியான அணுகுமுறைகளில் இயங்காமல் இந்தியாவுக்கு எதிராகப் போர் தொடுப்பதில் லாபம் ஒன்றும் அடையப் போவதில்லை, கொரில்லா போரினால் தாக்குப் பிடிக்கலாம், ஆனால் பிரச்சினைகள் தீரப் போவதில்லை என்ற அறிவுரையையே மதியுரைஞரும் மனைவியும் பல இடங்களிலும் பதிலாகப் பெற்றனர்.

ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வு ஸ்ரீலங்காவால் தரப்பட வேண்டும் என்பதில் தாங்கள் அக்கறை கொண்டு உள்ளனர் என சர்வதேச அரசுகள் கூறிக் கொண்டிருந்தன. அதனை இற்ற வரைக்கும் நினைவூட்டுகின்றன.

இந்தப் பிரச்சாரங்களால் எந்த சர்வதேச நாடும் இந்தியா வெளியேற வேண்டும் என்றோ, ஒப்பந்தத்தை நிலை நாட்ட அது எடுக்கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்றோ பொது வெளியில் கூறவில்லை

ஸ்ரீலங்காவில் நடக்கும் வன்முறைகள் துர்ப்பாக்கியமானவை என்று அபிப்பிராயங்களை மாத்திரம் அடிக்கடி வெளியிட்டுக் கொண்டன.

விடுதலைப் புலிகளுக்கு அழுத்தங்கள் பெருமளவில் வர, அவர்கள் இந்தியாவை வெளியேற்ற யாருடைய உதவியோடு இயங்குவது என்று கடைசியில் தங்களை நிலை நிறுத்திக்கொள்ள, தமிழ் மக்களின் பரம வைரிகளான பேரினவாத மையமான – இனவெறி நாயகர்களான



ஜே.ஆர்.



விஜே குமாரதுங்க

– ஸ்ரீ லங்கா அரசுடனையே கைகோர்த்து செயற்பட முன் வந்தனர். விடுதலை புலிகளை புதிய ஜனாதிபதி பிரேமதாச ‘எனது பொடியன்கள்’(My boys) பிள்ளைகள் என நேசக்கரம் நீட்டும் அளவுக்கு உறவாடினார்.

**பிரேமதாசா காலம்**

இந்தியப் படைகளுக்கு எதிரான நேரடி தாக்குதல்களைக் கைவிட்டு ஜே.வி.பி. வன்முறைகளை தென்னிலங்கையில் அரசுக்கும் தங்களது வர்த்தக ரீதியான போராட்டத்திற்கு ஆதரவு தரமாட்டார்கள் என கருதிய வலதுசாரி, இடதுசாரி, மிதவாதி யாவரையுமே அழித்து அங்கு ஒரு கொலைகளமே நடைபெற்றது

இப்படியான கொலைவெறி நடவடிக்கைகளில்தான் சினிமா தியேட்டர்கள், பல வணிக நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் குணரத்தினம், அரசியல் மதிப்புடன் வாழ்ந்து கொண்டு வந்த விஜே குமாரதுங்க (ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர்), ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஹர்ஷ அபேவர்த்தனா போன்றவர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

ஜே.ஆரின் ஜனாதிபதி பதவிக்கும் பலர் நோட்டம் போட்டுக் கொண்டிருந்தனர். லலித் அத்துலத் முதலி, காமினி திஸநாயக்கா போன்றோர் முதன்மையாக நின்றாலும், ஜே.ஆரும் அவரது



காமினி திஸநாய்க்கா

மகன் ரவி ஜெயவர்தனாகவும், பின்னால் மந்திரியாக இருந்த ரஞ்சன் விஜய ரத்னாவும் பிரேமதாஸவுக்கு ஆதரவாக இருந்து அவரே ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பாளராகவும் நியமிக்கப்பட்டார்.

ஜே.வி.பியோ இந்தத் தேர்தல் சட்ட விரோதமானது எனவும், இந்தத் தேர்தலும் ராஜிவின் உத்தரவில் ஸ்ரீலங்கா தொடர்ந்து இந்தியாவின் கொலனியாக இருப்பதற்கு அவர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகாமலும் நாடாளுமன்றத்தை கலக்காமலிம் நடத்துகிறார், அது போல மேலும் இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவர்கள் ஒருவரும் தேர்தலில் பங்கு பற்ற விடப்படவில்லை, ஆகவே யார் வென்றாலும் ஸ்ரீலங்கா இந்தியாவின் ஆக்கிரமிப்புக்கு கீழேதான் இருக்கும், யார் வென்றாலும் ஸ்ரீலங்காவின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது, தாங்கள் இந்தத் தேர்தலை எதிர்த்து உண்மையான, நீதியான தேர்தலுக்குப் போராடுவோம் என அறிக்கை தந்தார்கள்.



லலித் அத்துலத் முதலி



பாலா – அடேல்

இந்தப் பின்னணிகளில் பிரேமதாஸா ஜனாதிபதியாக 20 டிசம்பர் 1988 இல் பதவி ஏற்றார்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக ................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கொழும்பில்ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவும் ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் சர்வதேச சமூகத்தைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் பொய்யானதும் பிழையானதுமான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்காவின்சமந்தாபவர்கொழும்பு வந்திருந்த நேரத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட தமிழர்களை விடுதலை செய்வதற்குப் பொறிமுறை ஒன்று உருவாக்கப்படும் என்றும், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்குத் துரித தீர்வு காணப்படும் என்றும், விடுவிக்கப்படக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படுகின்றது என்றும், வடக்கு மாகாணம் பெரும் பொருளாதார மையமாக மாற்றப்படும் என்றும், ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு சர்வதேசப் பொலிஸாரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என்றும் நீண்ட உத்தர வாதங்களை அளித்திருக்கின்றார்.

ஜனாதிபதி நேர்மையாகத்தான் இந்த விடயங்களைக் குறிப்பிட்டிருக்கிறாரா என்பது முதலாவது கேள்வியாக இருக்கின்றது.

யுத்தம் முடிந்து பதின்மூன்று வருடங்கள் கடந்துவிட்டன அரசியல் கைதிகளில் சிலர் சிறைச்சாலைகளிலேயே இறந்து போயிருக்கின்றார்கள். பல்வேறுதடவைகள் சாகும்வரை உண்ணாவிரதப்போராட்டங்களில் அரசியல் கைதிகள் ஈடுபட்டிருக்கின்றார்கள். பல அரசுகளாலும் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. ரணில் அரசிலும் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டுவரையில் அவர் பிரதமராக இருந்த போது அரசியல் கைதிகளை விடுவிக்கப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. விடுவிக்கப்பட்ட ஒருசிலர் கூட சட்டத்தின் படி பிணையில் விடுவிக்கப்பட்டார்களே தவிர பிரதமரினதோ ஜனாதிபதியினதோ முயற்சியின்பேரில் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

யுத்தம் முடிந்து பதின்மூன்று வருடங்களின் பின்னர் இன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு ஒருபொறிமுறை உருவாக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி பல்வேறு உலக நாடுகள் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சமயத்தில் சர்வதேச சமூகத்தைத் திசை திருப்புவதற்கே இத்தகைய அறிவிப்புகள் வெளியிடப்படுகின்றன.

இதனை அடியொற்றியே வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் ஜெனிவாவில் நாங்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்ற இருக்கின்றோம் என்று பொய்யான தகவலைக் கூறியிருக்கின்றார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் பெற்றோர்களும் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அரசு அறிவிக்க வேண்டும் என்று கோரி 2000 நாள்களுக்கு மேலாகப் போராடி வருகின்றனர். இந்தப் போராட்டக் களத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெற்றோர் இறந்தும் போய்விட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் யாரும் சிறைகளில் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க எகத்தாளமாகப் பதிலளித்தாரே தவிர, இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணையோ அல்லது அதுதொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவுமே இவரால் மேற்கொள்ளப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

சரணடைந்தவர்கள், கைதுசெய்யப்பட்டவர்கள் என்ற வகையில் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் போயிருக்கிறார்கள் என விசாரணை ஆணைக் குழுக்களின் அறிக்கைகள் கூறுகின்றன. ஆனால், அவை ஏன்?எப்படி நடந்தது? என்பவற்றை விசாரித்தால் படைகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஞ்சி அல்லது அது யுத்தக் குற்றங்களுக்குள் உள்வாங்கப்படும் என்று அஞ்சி இதனை இவர்கள் யாருமே கண்டுகொள்ளவில்லை. ஆனால், தமது உறவுகளை இழந்த உற்றார், உறவினர்கள் இன்னமும் போராடிக்கொண்டிருக்கின்றனர். ரணிலோ காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் துரித தீர்வு காணப்படும் என்று கூறுகின்றார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளைக் கபளீகரம் செய்யும் நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இராணுவம், கடற்படை போன்ற படையினர் தொடர்ந்தும் தனிநபர்களுக்குச் சொந்தமான காணிகளை கபளீகரம் செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் - பளை பிரதேசத்தில் இராணுவத்தினர் பண்ணை அமைப்பதற்கென 1400 ஏக்கர் காணி கோரப்படுகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் என்பவை தமிழ் மக்களின் வரலாற்றுப்பூர்வ மானவாழ்விடம்என்பதைஏற்றுக்கொண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் இந்தியாவின் ராஜீவ் காந்தியும் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக்கொண்டனர்.

இப்போது வடக்குக்கும் கிழக்குக்கும் இடையிலான நிலத்தொடர்பை நிரந்தரமாக இல்லாமல் செய்வதற்காகக் குச்சவெளி பிரதேச செயலகப் பகுதியிலிருந்து 27 சதுர கிலோமீற்றரைக் கொண்ட ஏழாயிரம் ஏக்கர் காணியை தென்னமரவாடி தமிழ் மக்களிடமிருந்து பறிமுதல் செய்து அதனைப் பதவிசிறிபுர என்ற சிங்கள பிரதேச செயலகத்துடன் இணைத்து அந்தப் பிரதேச செயலகத்தை அநுராதபுரத்துடன் இணைப்பதன் மூலம் முல்லைத்தீவுக்கும் குச்சவெளிக்கும் இடைப்பட்ட ஒரு பிரதேசமானது அநுராதபுரத்துக்குச் சேர்மதியாகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படுகின்றது.

இதனைப் போலவே ஆயிரக்கணக்கான வருடங்கள் பழமை வாய்ந்த திருக்கோணேஸ்வரர் கோயிலின் புனிதத்தைக் கலைக்கக்கூடிய விதத்தில் நிரந்தரமான சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கி அந்தப் பிரதேசம் சிங்கள பௌத்த மக்களுக்குச் சொந்தமானது என்பதை ஸ்தாபிக்கும் நோக்கில் இலங்கை அரசு செய்து வருகின்றது.

மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு முன்னர் ஒரு பௌத்த கோயில், வவுனியாவில் பழமை வாய்ந்த வெடுக்குநாறி சிவன் கோயில் பிரதேசத்தில் பலாத்காரமான பௌத்த கோயில் நிர்மாணம், அதனைப் போலவே முல்லைத்தீவில் குருந்தூர் மலையில் நீதிமன்றத் தீர்ப்புகளை மீறி சட்டவிரோதமான முறையில் பௌத்த கோயில் நிர்மாணம் போன்ற விடயங்கள் இன்னமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க, மேலும் விடுவிக்கக்கூடிய காணிகள் குறித்து ஆராயப்படும் என்று சொல்வது சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவுவதைத் தவிர வேறென்ன?

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வடக்கு மாகாணத்தைப் பெரும் பொருளாதார வர்த்தக மையமாக மாற்றுவோம் என்று கூறுவதானது நகைச்சுவையின் உச்சக்கட்டம்.

யுத்தம் நடந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 90 ஆயிரம் பெண்கள் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்கள் வாழ்கின்றன. நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டோ அல்லது வேறுவிதமாகவோ நடமாட முடியாத சூழ்நிலையில் இருக்கின்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் மாற்றுத்திறனாளிகளாக இருக்கின்றனர். இவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்தவிதமான பிரத்தியேகப் பொறிமுறைகளோ, பிரத்தியேகமான வேலைத்திட்டங்களோ ரணிலின் நல்லாட்சி காலப்பகுதியிலும் மேற்கொள்ளப்படவில்லை.

அத்தகைய ஒரு சிந்தனைகூட அவருக்கு இருக்கவில்லை. இன்னும் கூறுவதாக இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்னமும் பின்தங்கிய பிரதேசங்களாகவே உள்ளன.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி காலத்தில் வடக்கு, கிழக்குக்கான பொருளாதார வர்த்தக மையம் ஒன்றை வவுனியாவில் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டது. இதனை நிறுவுவதற்கு ஓமந்தையில் ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்த இருபத்திரண்டரை ஏக்கர் காணியைப் பயன்படுத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், வடக்கில் அத்தகைய ஒரு மையம் அமைந்துவிடக்கூடாது என்பதற்காகவே அத்திட்டத்தை அரசியலாக்கி இன்றுவரை அத்தகைய திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட 20 கோடி ரூபா நிதியில் ஒதுக்குப்புறத்தில் மதகுவச்சகுளம் பகுதியில் கட்டப்பட்டுள்ள கட்டடம் யாருக்கும் பயனின்றி இருக்கின்றது.

இது மாத்திரமல்லாமல் பலத்த போராட்டத்தின் பின்னர், பலாலி விமான நிலையம் ஒரு சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டது. கொரோனாவைக் காரணம் காட்டி மூடப்பட்ட இவ்விமான நிலையம் இன்றுவரை மீளவும் திறக்கப்படவில்லை.

பலாலி விமான நிலையம் திறக்கப்பட்டால் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை செழிப்படையும், புதிய உணவு விடுதிகளும் புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும் என்பதையெல்லாம் தெரிந்தும்கூட, பலாலி விமான நிலையத்தைத் திறப்பதை அரச தரப்பினர் பின்னடித்துக்கொண்டே வருகின்றார்கள்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு ஏழெட்டு மணிநேரம் செலவிடவேண்டியுள்ளது மட்டுமல்லாமல், எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் இன்றைய காலகட்டத்தில் விமான நிலையத்துக்குப் போய்வர ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக போக்குவரத்துக்காகச் செலவு செய்ய வேண்டியும் உள்ளது.

இத்தகைய நிலையில் பலாலி விமானநிலையம் இயங்குமாக இருந்தால் புலம்பெயர் தமிழ் மக்களின் வருகை அதிகரிக்கும் என்பதுடன், தென்னிந்திய மக்களின் போக்குவரத்தும் அதிகரிக்கும். இதன்மூலம் பெருமளவிலான அந்நியச் செலாவணியையும் இலங்கை அரசு பெற்றுக்கொள்ள முடியும்.

எந்தப் பிரயோசனமுமற்ற அம்பாந்தோட்டை மத்தளை விமான நிலையத்துக்குப் பெருமளவு நிதியை வாரியிறைக்கும் இந்த அரசு வருமானம் வரக்கூடிய - பயன்தரக்கூடிய பலாலி விமானநிலையத்தைத் திறக்கமாட்டோம் என்று அடம்பிடிப்பது தான் வடக்கைப் பொருளாதார மையமாக மாற்றுவேன் என்னும் ரணிலின் கருத்தின் உட்பொருளா?

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் உறுப்பு நாடுகளை ஏமாற்றுவதற்கும் கொழும்பு வந்து செல்லும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் வாய்க்கு வந்தவற்றை அள்ளித்தெளிக்காமல் மேற்கண்ட விடயங்களுக்கு இனியாவது காத்திரமான நடவடிக்கைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் - என்றுள்ளது.

## ஒற்றையாட்சிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்களையும் எதிர்க்க வேண்டியது - நிராகரிக்க வேண்டியது விடுதலையை நேசிக்கும் ஈழத் தமிழினத்தின் வரலாற்றுக் கடமை. இதை யாராவது தவறென்று கூறுவார்களென்றால், அவ்வாறு கூறுவோர் ஒற்றையாட்சியையும் பதின்மூன்றாம் திருத்தத்தையும் அவற்றை ஏற்கும் - ஏற்கத் தயாராகும் துரோகக் கும்பல்களையும் காப்பாற்ற முற்படுகின்றனரா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது. இது வேதனையான விடயம்.

13ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாறு கோரும் கடிதத்தை சோரம் போன தமிழ்த் தலைமைகளிடமிருந்து பெற்றுக்கொண்ட இந்திய அரசும் ஈழத் தமிழினத்தின் இனப்பிரச்சினை மற்றும் இனப்படுகொலை விவகாரத்தை வெறும் 13ஆம் திருத்தத்திற்குள் முடக்க இலங்கை - இந்திய அரசுகளும் கங்கணம் கட்டிச் செயற்படும் இச்சூழலில், குறிப்பாக கடந்த 12ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 13ஆம் திருத்தத்தை இந்தியா வலியுறுத்திய நிலையில், அதற்கு எதிராக ஈழத் தமிழினம் தனது அபிலாசைகளை வலியுறுத்துவதைத் தடுக்கும் முயற்சியாகவே திரு. பஷீர் காக்கா அவர்களின் கருத்தை உற்றுநோக்க வேண்டியுள்ளது.

தியாகதீபம் திலீபன் அவர்களின் புனிதமான நாளில் ஈழத்தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் ஒற்றையாட்சியையும் பதின்மூன்றாம் திருத்தத்தையும் இவற்றை ஏற்கும் துரோகக் கும்பல்களையும் எதிர்ப்போம் என்று மீண்டும் சபதமெடுக்கின்றோம். அவ்வாறு சபதமெடுப்பது அரசியலென்றால் அதை நாங்கள் தொடர்ந்தும் செய்துகொண்டே இருப்போம் என்பதை ஆணித்தரமாக மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகின்றோம். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சில மாதங்களில் தீர்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் இலங்கை இராணுவ நடவடிக்கைகளில் ஒருபோதும் ஈடுபடாது என்று தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையில் உள்ள அனைத்து துறைமுகங்களும் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடன் முகாமைத்துவ செயற்பாடாக மாத்திரமே சீனாவுக்கு பங்குகள் உள்ளன எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## பகிடிவதையை எதிர்த்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் இரண்டு மாணவிகளும் உள்ளடங்குவதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு பகிடிவதைக்கு ஆதரவான மற்றும் எதிரான இரு மாணவர் குழுக்களிடையே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

சட்டபீடத்தில் இரண்டாம், மூன்றாம் வருடங்களில் கல்வி பயிலும் மாணவர்களிடையேயே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை பல்கலைக் கழகத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு அருகில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 30 பேர் கொண்ட மாணவர்கள் குழு நான்கு மாணவர்களையும் தாக்குவதற்கு வருகைத் தந்துள்ளதாகவும் இவர்கள் பகிடிவதைக்கு ஆதரவான மாணவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை பேராதனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com

# அதிகாரப்பகிர்வு சாத்தியமாகும் வரை இலங்கையில் முதலீடு செய்யமுடியாது!



## உலகத் தமிழர் பேரவை திட்டவட்டம்

வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட அனைத்து மாகாணங்களுக்கும் ஆகக்கூடியளவு அதிகாரப் பகிர்வுடன் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைத்தால் மாத்திரமே இலங்கையில் முதலீடு செய்ய முடியும் என புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மாகாணங்களுக்கான அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வுடன் 70 வருடகால தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை இலங்கை சாத்தியமாக்கும் என்றால் புலம்பெயர்ந்த வர்த்தக சமூகமும் தமிழ்நாடு வர்த்தக சமூகமும் இணைந்து இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகளை நினைத்துப் பார்க்க முடியும் எனத் தெரிவித்துள்ள உலகத் தமிழ் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் அதன் பின்னர் சாத்தியமற்ற வாய்ப்புகளைப் பார்க்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு உதவும் எங்கள் நோக்கம் தடைகள் தொடர்வது நீக்கப்படுவதற்கு அப்பாற்பட்டது எனக் குறிப்பிட்டுள்ள அவர், கடந்த வருடம் தடை நடைமுறைப்படுத்தப்பட்டு மூன்று மாதங்களுக்குப் பின்னர் கொவிட் பெருந்தொற்றால் இலங்கையர்கள் பலர் பலியான வேளை உலகத் தமிழர் பேரவை இலங்கை வைத்தியசாலைகளில் தட்டுப்பாடாகக் காணப்பட்ட 26 லட்சம் ரூபா பெறுமதியான செயற்கை சுவாசக்கருவிகளை வழங்கியது என அவர் தெரிவித்துள்ளார்.

தடைகள் நாங்கள் உதவிகளை வழங்குவதைத் தடுக்கவில்லை, எனினும் இந்தத் தடை காரணமாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் எங்கள் உதவிகளை நிராகரித்தனர் எனக் குறிப்பிட்டுள்ள சுரேன் சுரேந்திரன், எங்கள் சலுகைகள் மற்றும் விலையுயர்ந்த மற்றும் அவசரமாகத் தேவைப்படும் உபகரணங்களை வேறு நாடுகளுக்கு வழங்குமாறு எழுத்துபூர்வமாகக் கோரினார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

2016 இல் இலங்கையின் தென்பகுதி வெள்ளத்தின் போது சிங்கள கிராமங்களான மாத்தறை, களுத்துறைக்கு உதவுவதற்கு உலகத் தமிழர் பேரவை மருத்துவ பணியாளர்கள் மருந்துகளை அனுப்பியது எனவும் குறிப்பிட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் இலங்கையின் அனைத்து சமூகங்களுக்கும் நாங்கள் உதவுவதற்குத் தடைசெய்யப்பட்டுள்ளோமா இல்லையா என்பது பொருட்டல்ல என்பதைப் புலப்படுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சில நிமிடங்களில் இலங்கை அரசாங்கம் தடையை அகற்றும், தடையை அறிவிக்கும் என்பது அனைவரும் அறிந்த விடயம் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இதன் காரணமாக இலங்கையின் இந்த தன்னிச்சையான அர்த்தபூர்வமற்ற நடவடிக்கைகள் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 2014 இல் நாங்கள் பயங்கரவாத அமைப்பிற்கு உதவி வழங்கினோம் எனத் தெரிவித்து சில புலம்பெயர் அமைப்புகளையும் தனி நபர்களையும் தடை செய்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்தவேளை தடை செய்யப்பட்ட அமைப்புகள், நபர்கள் பயங்கரவாதத்துக்கு உதவினார்கள் என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் எவற்றையும் இலங்கை முன்வைக்கவில்லை, இலங்கை தன்னிடமிருந்த ஆதாரங்களைக் குறிப்பிட்ட நபர்கள், அமைப்புகளுக்கு தெரியப்படுத்தி அவர்கள் தங்கள் சார்பில் தடைக்கு எதிராக வாதாடுவதற்கான வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும்,எனினும் இந்த நடைமுறைகள் எவற்றையும் பின்பற்றாமல் தடைகள் விதிக்கப்பட்டன எனவும் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தடை நடவடிக்கை தன்னிச்சையானது. அர்த்தபூர்வமற்றது. ஐ.நாவின் விதிமுறைகளை முற்றாக மீறுவது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாகவே ஐநா உட்பட சர்வதேச அமைப்புகளும் சர்வதேச சமூகமும் தடையை முற்றாக புறக்கணித்தன,சில தரப்பினர் இது தன்னிச்சையானது நிராகரிக்கின்றோம் என அறிக்கைகளை வெளியிட்டனர் அதேவேளை ஏனைய அரசாங்க அதிகாரிகள் பகிரங்கமாக எங்களுடன் தொடர்பில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாடாளுமன்றத்தைப் பார்வையிட மீண்டும் வழங்கப்பட்டது அனுமதி

கொவிட் சூழல் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக நாடாளுமன்றத்தை பார்வையிடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் அவசியம் தொடர்பாக, புதன்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுவில் படைக்கலசேவிதர் முன்வைத்த பிரேரணை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட நாடாளுமன்றத்தைப் பார்வையிட விரும்பும் தரப்பினருக்கு நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி மற்றும் பார்வையாளர் பகுதியை (கலரி) நாடாளுமன்ற அமர்வு இடம்பெறாத நாள்களில் காலை 9.30 மணி முதல் 3மணி வரை( விடுதுறை நாள்கள் தவிர்ந்த) பார்வையிட அனுமதிக்கப்படுவார்கள்.

இதுதொடர்பான விண்ணப்பப்பத்தை கடிதம் அல்லது தொலை நகல் இலக்கமான 0112777473, 0112777335 அல்லது இணையத்தள முகவரியின் ஊடாக படைக்கல சேவிதருக்கு அனுப்பலாம் என படைக்கல சேவிதர் ஊடகப்பிரிவு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனதில் உறுதி வேண்டும்

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கனவுகள் கனவாகவே கலைந்துவிடக் கூடாது. கனவில் கண்டதை நினைவில் காண மனதில் உறுதியும் உடம்பில் தைரியமும் இருக்க வேண்டும். செல்கின்ற இடங்களில் எம்மை அவமதிக்கும் விதமாக செயல்பட்டால் அதை நினைத்து வருந்தக்கூடாது. அவமானம் என்பது உம் வாழ்க்கையில் ஏற்படும் தடையல்ல. வாழ்க்கை இப்படித்தான் இருக்கும் என்பதைக் கற்றுத்தரும் பாடம். வாழ்வு என்பது ஒரு முறைதான். இந்த வாழ்விலாவது நாம் சுதந்திரமாக வாழ வேண்டும். அவர் அப்படிக் கூறுவார், இவர் இப்படிக்கூறுவார் என்று பயந்து வாழ தேவையில்லை.

என் வாழ்க்கை நான் தான் வாழப்போகிறேன் எனக்கு அறிவுரை கூறும் அனைவரும் என் வாழ்வை வாழப்போவதில்லை. எனக்கு பிடித்ததை நான் செய்வேன். மனதில் உறுதியுடன் செயற்பட வேண்டும். உறுதியுடன் செயற்பட்டோர் வாழ்வில் தோல்வியுற்றனர் எனச் சரித்திரம் இல்லை. திருமூலர் அவர்கள் மனத்து விளக்கை மான்பட ஏற்றி உறுதியுடன் செயற்பட வேண்டும் என கூறியுள்ளார். அதை மனதில் வைத்து உறுதியுடன் வாழ்ந்து வாழ்வில் வெற்றி பெறுவோம் மன உறுதியே மனித வாழ்வாகும்.

- லதாரூபன் கிரிசனா -
(யாழ் .இந்து மகளிர் கல்லூரி)

# இலங்கை தொடர்பில் ஐ.நாவில் வலுவான தீர்மானம் அவசியம்!

## புலம்பெயர் தமிழர் அமைப்புகள் வலியுறுத்து

இலங்கை தொடர்பில் ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் அங்கத்துவ நாடுகள் வலுவான தீர்மானமொன்றை நிறைவேற்றவேண்டும் என புலம்பெயர் தமிழர் அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை வரவேற்றுள்ள புலம்பெயர் அமைப்புகள், வலுவான தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும் எனக் கோரியுள்ளன. மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகள் கடந்த 70 வருடங்களாகத் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலுடன் காணப்பட்ட அநீதிகளுக்கும் துஷ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியை வழங்கும் விதத்தில் காணப்படவேண்டும் எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக மிச்செல் பச்செலெட்டின் வலுவான மற்றும் விரிவான அறிக்கைகள் உட்பட அவரது ஆக்கபூர்வமான காலத்தை நாங்கள் வரவேற்கின்றோம். பாராட்டுகின்றோம் என புலம்பெயர் அமைப்புகள் தெரிவித்துள்ளன. புதிய உயர் ஸ்தானிகராக வொல்க்கெர் டேர்க் நியமிக்கப்பட்டமையை நாங்கள் வரவேற்கின்றோம். இலங்கையிலும் உலகில் நாங்கள் வாழும் நாடுகளிலும் மனித உரிமைகள் நீதிகள் தொடர்பில் அவருடன் இணைந்து செயற்பட உறுதியளிக்கின்றோம் எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

இலங்கை தொடர்பான தனது அறிக்கையில் மனித உரிமை ஆணையாளர் விசேடமாக இலங்கையில் மனித உரிமைகளுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பைச் சுட்டிக்காட்டியுள்ளதை நாங்கள் வரவேற்கின்றோம் எனத் தெரிவித்துள்ள புலம்பெயர் அமைப்புகள் பெருந்தொற்று காலத்திலும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போதும் இந்தத் தொடர்பு தெளிவாக புலப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான வேர்கள் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடு மற்றும் ஒடுக்குமுறையுடன் தொடர்புபட்டுள்ளன. இது பேரழிவு மிக்க பயங்கர யுத்தத்துக்கு வழிவகுத்தது. பெருமளவு திறமை அரசாங்கத்தின் மிகப்பெருமளவு பற்றாக் குறைகளுக்கு வழிவகுத்தது எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

2009 இல் யுத்தத்தில் வெற்றிபெற்றமை தொடர்பான இன தேசியவாத வெறியும், தமிழர்களுக்கு எதிரான பாரிய அநீதிகளுக்கு விளைவுகள் இல்லாதமையும் தற்போதைய பொருளதார அழிவின் முதன்மையான காரணியான ஊழலிற்கு வழிவகுத்தது என புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

மனிதஉரிமைஆணையாளர்சுட்டிக்காட்டியுள்ளதன் படி புதிய ஆரம்பத்துக்கு அவசியமான அடிப்படை கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பில் முன்னோக்கி நகர வேண்டிய – பழைய தவறுகளை மீண்டும் செய்வதை தவிர்க்கவேண்டிய – தருணம் இது எனவும் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# சுமார் 87 லட்சம் மக்கள் நாட்டில் உணவின்றி தவிப்பு!

சர்வதேச உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத்திட்டம் ஆகியவை மேற்கொண்ட உணவு பாதுகாப்பு மதிப்பீட்டின் படி, இலங்கையில் சுமார் 87லட்சம் மக்கள் (39.1 சதவீதம்) போதுமான உணவை உட்கொள்வதில்லை எனத் தெரியவந்துள்ளது.

2021 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுடன் ஒப்பிடும்போது இது ஒரு வியத்தகு சீரழிவைக் குறிக்கின்றது.

இந்த நிலையில் இலங்கையின் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஒரு கணக்கெடுப்பில் 3.4 சதவீத குடும்பங்கள் மட்டுமே போதுமான உணவு உட்கொள்ளலைக் கொண்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2022, ஜூனில் உணவில் முக்கியமாக அரிசி, காய்கறிகள், எண்ணெய் மற்றும் சர்க்கரை இருந்தது.

எனினும் புரதத்தின் முக்கிய ஆதாரமான மீன் நுகர்வு சராசரியாக வாரத்திற்கு 0.8 வீதமாக இருந்து என்று சர்வதேச உணவு மற்றும் விவசாய அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் என்பன கூறியுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2022இல் வெளியிடப்பெற்றது.